விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 27 சனிக்கிழமை (10.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன்

# படையினர் மூவரின் சடலம் மீட்பு

## இருவர் உயர் அதிகாரிகள்; நுணாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் முருகன் கோவிலுக்கு அண்மையில் உள்ள காவலரணில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் படையினர் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்களில் இருவர் படை உயர் அதிகாரிகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே ஒருவரை ஒருவர் சுட்டுக் கொண்டதால் இம்மரணம் இடம்பெற்றுள்ளதாக பலாலி படைத் தலைமையக ஊடகப் பேச்சாளர் மல்லவராச்சி தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் செனவிரட்னவின் செயலாளர் பணி நீக்கம்

(கொழும்பு)

தனது இணைப்புச் செயலாளரான லொகுகம் ஹேவகே தர்மசிறி அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள் யூ.டி.ஜே.செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

கடவத்தை இரட்டைக்கொலை சம்பவத்தில் இணைப்புச் செயலாளரின் சகோதரர் தொடர்பு பட்டிருப்பதாக தெரியவந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை இக்கொலை தொடர்பாக தேடப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் காவலில் உள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன கூறினார். சாட்சியங்களைத் திரட்டுவதில் ஏற்பட்ட தாமதமே சந்தேக நபர்களை கைது செய்வதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் எனவும் அவர் கூறினார். (எ-11)

## இலங்கைக்கு எதிராக செயற்படும் உறுப்பு நாடுகளிடையே பிளவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் ஜோசனைத்திட்டம் தொடர்பில் உறுப்பு நாடுகளுக்கிடையில் பாரியளவில் பிளவு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் விவகாரத்தில் உறுப்பு நாடுகளுக்கிடையில் நிலைவிவரும் முரண்பாடுகள் வெளிப்படையாக தென்படுகின்றது என சிரேஷ்ட மனிதவுரிமை செயற்பாட்டாளர் சுனிலா அபேசேகர தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற முனைப்புக்காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிரான பிரேரணை

## உப மாநாட்டில் பங்கேற்ற இந்தியா மௌனம்; சீனா எதிர்ப்பு

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிரான பிரேரணையை சமர்ப்பித்துள்ள அமெரிக்கா இது தொடர்பில் உப மாநாடு ஒன்றினை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ளது.

இவ் உயர் மாநாட்டில் 25 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதில் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் அமெரிக்கா கருத்துக்களை கேட்டறிந்து கொண்டது.

எனினும் இந்தியா கருத்து எதனையும் கூறவில்லை. ஆனால் சீனா அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. (விரிவான செய்தி 12 ஆம் பக்கத்தில்) (எ-11)

## 10 இலட்சம் லஞ்சம் பெற்ற பொலிஸார் கைது

(கொழும்பு)

பெண் ஒருவரிடம் இருந்து 10 இலட்சம் ரூபாய் பணத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் நுகேகொட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹரகமவைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் இருந்து 12 இலட்சம் ரூபாய் லஞ்சம் கோரி அதில் (24ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(கிளிநொச்சி)

குடும்பப்பிரச்சினை காரணமாக ஏற்பட்டதகராற்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அவரது மைத்துனரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று உடையார் கட்டு வடக்குப் (02ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் போர் வீடியோவைப் பார்த்து நான் விட்ட கண்ணீர் இன்னும் நிற்கவில்லை



### கலைஞர் கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்

(சென்னை)

இலங்கையில் இறுதிப் போரின் போது எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வீடியோ காட்சிகளின் தொகுப்பு ஒன்றை நான் பார்க்க நேரிட்டபோது என் கண்களில் வழிந்த கண்ணீர் இன்றும் நின்றபாடில்லை.

இந்திய மத்திய அரசில் இருப்போர் அந்தக் காட்சிகளை ஒருமுறை பார்த்தாலே தமிழக மக்கள் சார்பில் வைக்கப்படுகின்ற இலங்கைக்கு எதிரான கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதாக இந்திய மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்றும் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (24ஆம் பக்கம் பார்க்க)

# யாழின் அடையாளச் சின்னமாக கலாசார நிலையம் விளங்கும்

## மாநகர சபை முதல்வர் நம்பிக்கை

யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாக இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள கலாசார நிலையம் விளங்கவுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம் பெற்ற இந்த கலாசார நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவின் 900 மில்லியன் ரூபா நிதி யுதவியுடன் யாழ்.பொது நூலகத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ள கலாசார நிலையம் யாழ்ப்பாணத்தின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் விளங்கும்.

தேசிய ரீதியில் இந்தக் கலாசார நிலையம் அமைப்பதற்கான வரைபடங்கள் கோரப்பட்டதன் பிரகாரம் 29 வரைபடங்கள் கிடைத்தன. ஏழு பேர் கொண்ட குழுவினர் இந்த வரைபடங்களை ஆராய்ந்து இறுதியில் சிறந்த கட்டிடக் கலைஞர் மதுர பிறேம குணதிலகவின் வரைபடம் தெரிவு செய்யப்பட்டது.

இந்தியாவினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் 7 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பிறேம குணதிலகவிற்கு வழங்கப்பட்டது.

திராவிட கலை மரபுடன் அமைக்கப்படவுள்ள இந்த கலாசார நிலையம் யாழ். பொதுநூலகம், நல்லூர் முருகன் ஆலயம் போன்று யாழ்ப்பாணத்தின் அடையாளமாகவும் கட்டிடக் கலையில் சிறப்பு வாய்ந்ததாகவும் இந்தியாவின் நட்புறவை வெளிப்படுத்துவதாகவும் விளங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# ஆரணியின் கவிதை நூல்கள் இன்று வவுனியாவில் வெளியீடு

(வவுனியா)

கவிஞர் ஆரணியின் 'கடற்கரை பூவரசு' மற்றும் 'வண்ணக் கனவு' ஆகிய இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இன்று இடம் பெறவுள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இன்று காலை 10.30 மணிக்கு கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையை செல்வி சி.அட்சயாவும், ஆசியுரையை சிவநெறி புரவலர் ஏ.இராமசுவாமியும் வாழ்த்துரையை வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்சும் நிகழ்த்த, வெளியீட்டுரையை என்.விஜயசுந்தரமும், நயப்புரையை தமிழரவி த.சிவகுமாரனும், ஏற்புரையை நூலாசிரியரும் வவுனியா பிரதேச செயலருமான அ.சிவபால சுந்தரனும்(ஆரணி) நிகழ்த்த வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் நிகழ்ச்சித் தொகுப்பை வழங்குவார்.(நு)

# இலங்கை பேராசிரியையின் உரைக்கு தமிழகத்தில் போர்க் கொடி

தமிழகம் திருநெல்வேலியில், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில், மகளிர் தினத்தையொட்டி நடை பெற்ற கருத்தரங்கில்,

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியை ஜீவா நீரல்லா, இலங்கையில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடப்பதாக சித்திரிப்பது சரியல்ல எனவும் தனது உரையின் போது கருத்து வெளியிட்டதையடுத்து குழப்ப நிலை உருவாகியது.

இதனால் ஆத்திரமடைந்த தமிழ் ஆர்வலர்கள் அவரது கருத்தை எதிர்த்ததுடன், கருத்தரங்கு அரங்கிற்குள்ளும் புகுந்தனர்.

தாங்கள் கொண்டு சென்றிருந்த பதாதைகளையும் தூக்கிப் பிடித்தபடி, இலங்கைப் பேராசிரியை வெளியேறு என்ற கோஷங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.இதையடுத்து பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். பேராசிரியை ஜீவா நீரல்லாவை உடனடியாக பாதுகாப்புடன் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது(எ-11)

## இளம் ...

பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரம் (வயது 31) என்ற இளம் குடும்பஸ்தரே வெட்டிக்கொலை செய்யப்பட்டவராவார்.

வெட்டப்பட்ட பிரஸ்தாப நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் அவரது சடலம் முல்லைத் தீவு வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (எ-8)

# கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து அருகிலுள்ள மின் கம்பத்தில் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் பலாலி வீதி கந்தர்மடச் சந்தியில இடம் பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளினை செலுத்திச் சென்ற நவக்கிரி மேற்கு புத்தூரினைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கதிரவேலு யுவராஜா (வயது-32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அதி வேகமாக மோட்டார் சைக்கிளினை செலுத்திக் கொண்டு கந்தர்மடச் சந்தியில் மோட்டார் சைக்கிளினை திருப்ப முயல்கை யில் அருகிலுள்ள மின் கம்பத்தோடு மோட்டார் சைக்கிள் மோதியது.

இதில் மோட்டார் சைக்கிளினை செலுத்திச் சென்றவர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின்புறம்இருந்து வந்த கொழும்பு மட்டக்குளியைச் சேர்ந்த பிரபாகரன் சசிக்குமார் (வயது-24) சிறு காயங்களுடன் தப்பினார். (எ-4)

# குடும்பக் கட்டுபாட்டு ஊசி ஏற்றியதும் உயிரிழந்த பெண்

(கண்டி)

குடும்ப கட்டுப்பாட்டு ஊசி ஏற்றிய 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவர் ஊசி ஏற்றி சில நிமிடங்களிலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று கண்டி. ரம்புகேவெல என்னு மிடத்தில் இடம்பெற்றது.

இனோகா ரூபசிங்க என்ற 28 வயதுடைய் ஒரு பிள்ளையின் தாயான இப் பெண் நேற்று முன்தினம்; ரம்புக்கேவெல சுகாதார நிலையத்திற்கு சென்று குடும்ப கட்டுப்பாட்டு ஊசி ஏற்றியுள்ளதுடன் இவ் ஊசியை ஏற்றி சில நிமிடங்களில் மயக்கமடைந்ததுடன்;

அவர் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னரே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

# இலங்கைக்கு எதிரா...

எனினும் பாகிஸ்தான் உள்ளிட்ட அணி சேரா நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் இலங்கைக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என கோரியுள்ளன.

சீனா, ரஷ்யா, அல்ஜீரியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்தியா, லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் இன்னமும் உறுதியான நிலைப்பாடு எதனையும் வெளியிடவில்லை.

இதேவேளை வலுவான ஒரு தீர்மானமொன்றை நிறைவேற்றினால் குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் இலங்கை கூடுதல் ஆர்வம் காட்டும் என ஐரோப்பிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

மனித உரிமை அமைப்புகள் தீர்மானம் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக சுனிலா அபேசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம்திகதியளவில் இலங் கைக்கு எதிராக தீர்மானம் நிறை வேற்றப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (எ-11)


EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி (7579)
விபரங்களுக்கு :0773212711

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ்.வீதியில் (சிறிதர் தியேட்டருக்கு அருகில்) 2 1/4 பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0775567680,
0779619064
(7618)

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
Video Production, Web Animation
Master Diploma in Multimedia
பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 12-03-2012
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி, T.P : 021-2262399
280,1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி, T.P : 021-2270267

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக 10.03.2012 அதிர்ஷ்டம்பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால்பிற்போடப்பட்டுள்ளதுடன் அடுத்த மாதம் (14.04.2012) அதிர்ஷ்டம் பார்க்கப்படுமென அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

வி.மகாலிங்கம்
செயலாளர்
(7652)

## இலவச அழகுகலை பயிற்சி

ஒறிபிளேம் (Oriflame) தனது 45வது வருடத்தை முன்னிட்டு இலவச அழகுகலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ரூபா 11,370 பெறுமதியான பரிசில்கள் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு.

வயதெல்லை - 18 மேல்
காலம் - 11.03.2012
நேரம்- 10.00 am
இடம்: 187/30, யுனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சந்திர சந்தி அருகாமை, கொட்டடி)

தொடர்புகளுக்கு: 0771336124
(7647)

மானிப்பாயில்!
## முதலீட்டாளர் தினம் 2012

இடம் : பிரதேச சபை மண்டபம் - மானிப்பாய்
காலம்: 10.03.2012 (இன்று) சனிக்கிழமை
காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை

மேலதிக தகவல்களுக்கு
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
2221455 / 5672444
அனுமதி இலவசம்

## Vacancy - English Lecturer(Part Time)

IDM Nations Campus Chavakachcheri is a higher education institution that delivers a Modern Spoken English Program for adult students including day workers, migrants and professionals

Now, we are recruiting a part time Lecturer to conduct the above program



Ideal candidates may hold the following,
- Hold a relevant diploma or degree qualifications or Experience,
- Confident and excellent command in English,
- Excellent teaching skills,
- Good leadership skills,
- Ability of developing teaching and learning strategies to meet the needs of all students and their continuous improvement,

Apply via- email or by post with complete Curriculum Vitae Of two non- related referees, before 16th March

IDM
IDM Nations Campus
Chavakachcheri Branch
No,267, Kandy Road, Chavakachcheri
Tel: 021 7 200 600
E- mail: idmchava@yahoo.com


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## அறிவித்தல்
## பட்டச் சான்றிதழ் வழங்கல்

(கலைமாணி, வணிகமாணி, இசைமாணி மற்றும் நடனமாணி)

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்களை 12.03.2012 (திங்கட்கிழமை) தொடக்கம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உரியவர்கள் வெளிவாரி பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூ.500.00 இனை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை வெளிவாரி பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
08.03.2012
(சி-6059)

# இன்று ஒரு தகவல்

## சுற்றுச்சூழல்

இன்று வரைக்கும் நாங்கள் அடிக்கடி கவலைப்பட்டது மனிதர்களிடமிருந்து மனிதர்களை எவ்வாறு காப்பாற்றுவது எப்படி என்பதற்காகத்தான்!

ஆனால், இனிமேல் அதைவிட கவலை ஒன்று வந்து விட்டது. அது என்னவென்றால்...

மனிதனிடமிருந்து பூமியை காப்பாற்றுவது எப்படி? இது தான் இன்று பெரிய கவலை!

மனிதனுக்கு கோபம் வந்தால் சூடாகிவிட்டான் என்று சொல்வதுண்டு. ஆனால், இப்பொழுது பூமிக்கு கோபம் வந்து விட்டது. அது சூடாகிக் கொண்டிருக்கின்றது! பூமிக்கு கோபத்தை உண்டு பண்ணியது யார்?

மனிதன் தான்! இன்னும் 25 வருடத்திலே பூமியின் வெப்பம் சராசரியாக ஒன்று முதல் 2 டிகிரி வரைக்கும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளிலே 6 டிகிரி வரைக்கும் அதிகரிக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

சரி அவ்வாறு அதிகரித்தால் எங்களுக்கு என்ன நடந்து விடும்? என்று இருந்துவிட முடியாது? அதனாலே பல பாதக விளைவுகள் ஏற்படும். உதாரணத்திற்கு ஒன்றை பார்ப்போம்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது வடதுருவம் ,தென் துருவம் ஆகிய பகுதிகளில் எல்லாம் இருக்கின்ற பிரமாண்டமான பனிக்கட்டிகள் உருகுவதற்கு ஆரம்பித்துவிடும். அதனாலே கடல் மட்டம் உயர்ந்து பல தீவுகள் மூழ்க வேண்டிய [illegible]மைக்கு ஆளாகிவிடும். உலகம் பூராகவும் கடலோர [illegible]ள் மூழ்கும். அங்கே வசிக்கின்றவர்கள் எல்லோரும் [illegible] இடம் பார்த்து செல்ல வேண்டியிருக்கும்.

இவ்வாறு பூமி கோபப்படுகின்ற அளவுக்கு மனிதன் இயற்கையின் சமநிலையை கெடுத்துவிட்டான்.

நாம் ஒட்சிசன் வாயுவை உள்ளெடுத்து காபனீரொட்சைட் வாயுவை வெளிவிடுகின்றோம். இந்த காபனீரொட்சைட்டை மரம், செடி, கொடிகளெல்லாம் பயன்படுத்தி ஒட்சிசன் வாயுவை வெளியிடுகின்றன.

இது ஒழுங்காக நடைபெற்றால் சரி... ஆனால், காடுகளை மனிதன் அழிக்க ஆரம்பித்தான். காபனீரொட்சைட் சேர்ந்து போய்விட்டது. அதையெல்லாம் மாற்றி கொடுப்பது யார்?

இவ்வாறு இயற்கையினுடைய மகிமையை உணர்ந்த மனிதன் இயற்கையோடு அனுசரித்து போக ஆரம்பித்தான்.

அதற்காக தான் உலக தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி யோசித்தார்கள்.

இந்த உலகத்திலே மரம்,செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் சந்தோசமாக இருந்தால் தான் நாங்களும் சந்தோசமாக இருக்க முடியும் என்றார்கள்.

இதற்காகத்தான் தெய்வீக கதைகளில் எல்லாம் தெய்வங்கள், மிருகங்கள், பறவைகள் என்பவற்றினை வாகனமாக வைத்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பை புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முன்னோர்வீதியோரத்திலே எல்லாம் மரங்களை நூட்டினார்கள். மிருகங்களுக்கும் மருத்துவமனைகள் நிறுவினார்கள். அத்துடன் மரம் வளர்த்தால் நரகம் இல்லையென்பதையும் தெரிந்து கொண்டார்கள்.

ஆல், அரசு, வேம்பு இந்த மரங்களை எல்லாம் தெய்வமாக நினைத்து வழிபடுகின்ற பழக்கம் இன்றும் உண்டு. இருந்தும் என்ன பிரயோசனம். உலக சுற்றுச்சூழல் மிகவும் மோசமாக கெட்டு போய்விட்டது.

இனிநாங்கள் இயற்கையின் படைப்புகளை அழிக்காமல் இருத்தல் வேண்டும். அநேக மக்கள் எதற்கும் கவலைப்படவே மாட்டார்கள். மிகவும் அலட்சியம். அலுவலக நண்பர் ஒருவரிடம் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். இப்படியே போனால் ஒரு நாள் பெரிய பிரளயமே வந்து விடும். கடல்கொந்தளிக்கும் சூறாவளி வீசும். எரிமலை வெடிக்கும். பூகம்பம் வரும் அப்படி யென்று சொன்னோன்.

அவர் மிகவும் சாவகாசமாக என்னை பார்த்து "அன்றைக்கு அலுவலகம் விடுமுறை விடுவார்கள் தானே சேர்?" அப்படி யென்று சொன்னார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சபையில் 890 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன



(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையில் 890 நிறுவனங்கள் இதுவரை பதிவினை மேற்கொண்டுள்ளன என ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் உதவி பொதுமுகாமையாளர் ஏ.ஜே.எம்.எஸ்.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டத்திற்கும் பொறுப்பான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில் 890 நிறுவனங்கள் இது வரைப் பதிவினை மேற்கொண்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தப் பிராந்தியக் காரியாலயம் அங்குரார்ப்பணம் செய்த போது 229 நிறுவனங்கள் அந்த ஆண்டில் பதிவினை மேற்கொண்டன.

தற்போது 890 நிறுவனங்கள் பதிவினை மேற்கொண்டுள்ளன. இதன்மூலம் 60 இலட்சம் ரூபா மாதாந்தம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு கிடைக்கின்றது.

2010 ஆம் ஆண்டு இந்தத் தொகை 25 இலட்சம் ரூபாவாகயிருந்தது.

மேலும் கடந்தகால யுத்த் சூழலினால் இந்தச் சேவை வடபகுதியில் தடைப்பட்டிருந்தது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நன்மைகள் மற்றும் சேவைகள் தற்போது அனைத்து மக்களுக்கும் தெரிய வந்துள்ளது.

எமது சபையில் இணைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. மேலும் எமது சபையில் அங்கத்தவராக இணைந்த ஊழியர் இறந்தால் 50 ஆயிரம் ரூபா இலவசமாக வழங்கப்படுவதோடு இருதய சத்திர சிகிச்சை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இலவசமாகவும் கண்ணுக்கு வில்லை வைத்தால் 25 ஆயிரம் ரூபாவும் இலவசமாக வழங்கப்படும்.

இதுதவிர எமது சபையில் அங்கத்தவராகவுள்ள ஊழியரின் பிள்ளைகள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தாலும் 15 ஆயிரம் ரூபா இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# மகளிர் தினவிழா

கோப்பாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் அலுவலக மண்டபத்தில் சங்கத் தலைவி சோ. கலைச் செல்வி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.நிர்மலன், கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம், கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் அ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-134)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 35 |
| தக்காளி | 10 | 20 | 15 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 |
| கரட் | 40 | 40 | 45 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 25 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | -- | 20 | 25 |
| கறிமிளகாய் | 50 | 80 | 50 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 |
| போஞ்சி | 40 | 40 | 50 |
| கத்தரிதம்புள்ள | 35 | 60 | 35 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 10 |
| தேசிக்காய் | 35-40 | 20 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 30 |
| வெங்காயப்பூ | 50 | 90 | 40 |

# இராசி பலன்

**10.03.2012**
**(மாசி 27, சனிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு**
**துதியை பிற்பகல் 12.07 மணிவரை**
**அத்தம் மாலை 5.35 மணிவரை**
**இராகுகாலம் 9.23-10.53மணிவரை**
**சுபநேரம் 3.23-4.53 மணிவரை**

**மேடம்** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும்,உறவினர் வருகையுண்டு, குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்,உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், திருமணப் பேச்சுகள் முடிவாகி நல்ல செய்திகளைத் தரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு. வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** தொலைபேசி வழித்தகவலால் சந்தோசம் அதிகரிக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், பணவரவு திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** கனிவான பேச்சுகளால் காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள், சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள்.

**சிங்கம்** சான்றோர் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், முயற்சி கைகூடும்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் வளர்ச்சியுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் ஆதாயம் கிடைக்கும், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயரும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் வளர்ச்சி கூடும்.

**தனுசு** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில்ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**மகரம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சிக்குரிய செய்திகளைக்கொண்டு வந்து சேர்ப்பர், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு, போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, போசன சுகமுண்டு.

**மீனம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர், திருமண வாய்ப்புகள் தேடி வரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

வளவன்

# பிரம்ம கானசபா அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய பிரம்மகானசபா அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆனைப்பந்தி இந்து மத குருமார் ஒன்றியத்தில் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது சிவானந்தம் சஞ்சிகையின் அடுத்த வெளியீடு பற்றியதான எழுத்தாளர் அவை ஒன்றுகூடல் அன்றைய தினம் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது என இந்து மதகுருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இப்பிரம்ம கானசபாவானது அந்தண கலைஞர்கள், நுண்கலைத்துறை மாணவர்கள், பாடசாலையில் கலைகளை ஒரு பாடமாக பயிலும் மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் அங்கம் வகிக்கும் வகையில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# ஊடகவியலாளர்கள் பரந்த அறிவினை கொண்டவர்களாக விளங்க வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

சில ஊடகங்கள் தன்னலத்திற்காக உண்மையினை மறைத்து செய்திகளை பிரசுரிக்கின்றன என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

ஊடகக் கற்றை நெறிக்கான இவ்வாண்டுக்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நெறி மையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஒரு சில ஊடகங்களே பக்கச்சார்பற்று இயங்குகின்றன. உதாரணமாக பி.பி.சி போன்ற ஊடகங்களே சார்பில்லாமல் செய்திகளை வெளியிடுகின்றன.

இத்தன்மையானது எமது ஊடகங்களிலும் கொண்டுவரப்படல் வேண்டும்.

ஊடகவியலாளர்கள் பரந்த அறிவினை கொண்டவர்களாக காணப்படல் வேண்டும். பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் என அனைத்து கல்விமான்களுக்கும் தெரிந்த, அறிந்த விடயங்களை ஒரு ஊடகவியலாளன் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அது கட்டாயமும் கூட.

இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்கு மொழிப்புலமை மிக அவசியமான தொன்றாகும். ஆங்கில மொழி அனைத்து தரப்பினராலும் பேசப்பட வேண்டிய ஒன்றாக காணப்படுவதனால் இதனை ஊடகவியலாளர்கள் கட்டாயம் தெரிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும்.

அத்துடன் ஆங்கில மொழியோடு சிங்கள மொழியும் தெரிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும்.

மேலும் சில ஊடகங்கள் தமிழ் மொழியினை சரியாக உச்சரிக்கத் தவறுகின்றன. குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களே இவ்வாறான தவறினை மீண்டும் மீண்டும் விடுகின்றனர்.

இவ் ஊடகங்கள் 90 வீதம் ஆங்கிலத்தோடு கொச்சைத் தமிழில் செய்திகளை வெளியிடுவது வேதனைக்குரியதாகும்.

தாய் மொழியைக் கூட சில ஊடகங்கள் உச்சரிப்பதில் தவறு விடுகின்றன. ஊடக பயிற்சி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறுகின்ற மாணவர்கள் சிறந்த பக்கச்சார்பற்ற பத்திரிகையாளர்களாக வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஞா. ஞானக்குமரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய நிபுணத்துவ ஆலோசகர் ஹென்றிக் குறோனேட், பயிற்சி மைய இணைப்பாளர் உதயகுமார், பயிற்சி நிலைய விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-2-4)




# ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் நடமாடும் சேவை



(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நேற்று யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் ஆரம்பமானது.

நேற்றுக்காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்ற இந்த நடமாடும் சேவை இன்று சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகள் மீளப்பெறல் தொடர்பாகவும் வருட இறுதி கூற்று தொடர்பான பிரச்சினைகள் மற்றும் படிவம் ஆர்1, ஆர்4, படிவம் II தொடர்பான பிரச்சினைகள் நிலுவையாகவுள்ள தண்டப்பணம், தொழில் தருநர்கள், ஊழியர்களினுடைய பிரச்சினைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் இந்த நடமாடும் சேவையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை பிரதி பொது முகாமையாளர் ஜே. எம்.எஸ். பி. உடுகம, உதவிப் பொது முகாமையாளர்களான எ.ஜே. எம். எஸ். ஜெயசுந்தர, எச். எம். செனவர்த்தன உட்பட பல அதிகாரிகள் விளக்கமளித்தனர். (அ-6)

# பற்றைக்காடாக காட்சியளிக்கும் நவாலி கிழக்கு ஞானவைரவர் வீதி

(நவாலி)

நவாலி கிழக்கு ஞானவைரவர் வீதியில் உள்ள காணிகள் சில பற்றைக்காடாக காட்சியளிக்கின்றன.

இதனால் இக்காணிகளில் விலங்கு கழிவுகளும் மற்றும் ஏனைய கழிவுகளும் வீசப்படுவதனால் அவ்வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் இக்காணிகளில் உள்ள கழிவுப் பொருட்களால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடுகளும் நுளம்பு பெருக்கத்துடன் மயிர் கொட்டிகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

இதனால் அப்பகுதி மக்களும் வீதியால் பயணிப்போரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய அவல நிலை உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

# வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 33 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விசேட நிகழ்வுகளாக வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 80 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதி, விதவைகளுக்கான நிதி, ஊனமுற்றோர் நிதி வழங்கல், தந்தையை இழந்த மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கல் என்பன நடைபெறவுள்ளன.

அத்தோடு வெள்ளிவிழா கண்ட அங்கத்தவர்களை கௌரவித்தல், மன்ற அங்கத்தவர்களின் சேமிப்பு திட்டத்தில் முன்நிலையில் நிற்பவர்களை கௌரவித்தல் நிகழ்வுகளும் நடப்பாண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறவுள்ளது. (அ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)


வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிரு ந்து மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்தி வரையான பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (அ)


# மானிப்பாய் இந்துவுக்கு புதிய பேருந்து அன்பளிப்பு

(நவாலி)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரால் புதிதாக பேருந்து ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர்கள் சங்கத்தினால் வழங்கப்பட்ட 28 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இப் பேருந்து நேற்றுக்காலை 10 மணியளவில் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டின் பின்னர் கல்லூரி அதிபரிடம் பழைய மாணவர் சங்கத்தினரால் ஒப்படைக்கப் பட்டது. (அ-3-26)





நெடுந்தீவு 5 ஆம் வட்டாரம் கரமத்தை கந்தன் ஆலய தேர்த்திருவிழாவில் முருகப்பெருமான தேரில் ஆரோகணிப்பதற்காக செல்வதையும் தேரில் ஆரோகணித்திருப்பதையும் படங்களில் காணலாம்.

உலக உணவு விநியோகத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உலக உணவுத்திட்ட பிரதிநிதிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# உலக வல்லாதிக்கமே தமிழர்களுக்கான குரல் கொடுப்பதை வரவேற்போம்

## கனேடிய பா.உ.ராதிகா சிற்சபைஈசன்



(கொழும்பு)

உலகின் வல்லாதிக்கமே இலங்கையின் உண்மை முகத்தை உலகிற்குக் எடுத்துக்காட்டி ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான முயற்சிகளுக்கு வித்திடுவது சிறந்ததொரு செயலென கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் பிரேரணை தொடர்பாகக் கருத்துக்கூறும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான ஒரு தீர்மானம் தமிழர்களின் இனப்பிரச்சினை இன்னமும் ஆறா வடுவாக இருக்கிறது என்பதை படம் போட்டு காட்டுகிறது. இத்தகைய அழுத்தங்கள் இனப் பிரச்சினை தீர்வுக்கான ஒரு சாத்தியத்தை உருவாக்கும் என தெரிவித்தார்.

இவ்வாறு ஒரு பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதை இலங்கை அரசு கருத்திலெடுக்காவிட்டால் அதுவே அங்கு யுத்த இறுதியில் இடம்பெற்ற படுகொலைகள், யுத்த தர்ம மீறல்கள் போன்ற விசாரணைகளைச் சர்வதேசம் ஆரம்பிக்க வழிவகுக்கும் என தெரிவித்தார்.

அமெரிக்காவின் பாணியிலேயே கனடாவும் அழுத்தம் கொடுக்கலாம் என்று தெரிவித்த ராதிகா தங்களது கட்சியின் வெளிவிவகாரத்துறைசார் பாராளுமன்ற உறுப்பினருடன் இவ்விடயத்தை பாராளுமன்றின் கவனத்திற்கு கொண்டு வருமாறு தான் வேண்டுகோள் விடுத்ததாகவும் தெரிவித்தார்.

இளைய சமுதாயத்தைச் சேர்ந்த தமிழரான தன்னுடைய பாராளுமன்றப் பிரசன்னமானது கனேடியத் தமிழச் சமுதாயம், கனேடியப் பல்லின சமுதாயத்தில் தாக்கம் மிகுந்ததொரு இனம் என்ற கருத்தை ஆளும் கட்சியுள்ளிட்ட சகலரும் உணர்ந்து கொள்ள வழியேற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர்களின் வாழ்விற்கு சுபீட்சமான ஒரு எதிர்காலம் ஏற்படவும் போர்க்குற்ற மீறல்களுக்கு ஒரு நியாயமான விசாரணை நடைபெறவும் தங்கனது கட்சி தொடர்ந்து உழைக்கும்.எனவும் தெரிவித்துள்ளார். (அ-7)

## கலைஞருக்கான அரச ஓய்வூதியம்

பூநகரி நாச்சிக்குடா கிராமத்தைச் சேர்ந்த கலாபூஷணம் சூசை சந்தியா (வயது 84) என்பவருக்கு கலைஞருக்கான அரச ஓய்வூதியம் கிடைக்கவுள்ளது.

இதன்போது மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சால் வழங்கப்படவுள்ளது. இதற்கான முதல் மாத ஓய்வூதிய உறுதிச்சீட்டு கிடைக்கப்பெற்றுள்ளது.பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கலைஞருக்கான ஓய்வூதியம் பெறும் முதல் நபர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-7-84)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையுடன் இணைந்து யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடத்தவுள்ளது என விளையாட்டு அவை அறிவித்துள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்று சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இச்சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குத்தெரிவு போட்டி பற்றிய விபரங்கள் கழகங்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-7)

# அரச காணிகளின் பங்கீடு குறித்து அதிக முறைப்பாடுகள்

## யாழ்.ம.உரிமைகள் ஆணைக்குழு தகவல்

கிளிநொச்சியில் அரசாங்க காணிகளின் பங்கீடுகள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் கிளிநொச்சியில் வாழும் மக்களின் உறவினர்களுக்கு இடையில் அதிகளவில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்க காணிகளைப் பங்கீடு செய்கின்ற போது பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கருதி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை செய்துள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் அரசாங்க நிர்வாகத்தில் ஏற்படும் சேவைகள் தொடர்பாகவும் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-7)

# தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட மேலதிக மொழித்தேர்ச்சியில் சித்தியடைந்தோர் விபரம்

தேசிய கல்வி நிறுவகத்தின் மேலதிக மொழித் தேர்ச்சியில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப் பரீட்சைகள் கிளிநொச்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு,

**சிங்களம்**

பாலன் கணேசமூர்த்தி, விஜயநாதன் ராஜேஸ்வரி, மகாலிங்கம் ஜெகதீஸ்வரன், நடராஜா சண்முகலிங்கம், தம்பிராசா பேரின்பராசா, சதாசிவம் தர்ஜினி, சின்னத்துரை இளங்குமார், தில்லைநாதன் மேரி றெஜினா மெடில்டா, சுந்தரம்பிள்ளை வரதராஜா, சரவணமுத்து சந்திரவதன், செல்வராஜேஸ்வரன் சசிகலா, கனகசுந்தரம் சிவஞானேஸ்வரி, மகேஸ்வரன் ஜெயமதி, சந்திரகுமார் தமயந்தி, தனபாலசிங்கம் ஜெயந்தி, கதிரமலை யோகநாதன், யோகநாதன் மஞ்சுளா, கனகலிங்கம் குமுதினி, சிவஞானம் விமலேஸ்வரி, ரவிச்சந்திரன் றஞ்சனா, ரவீந்திரநாதன் ராஜரஞ்சிதம், லாசர் துரைரஜனி, ராஜலிங்கம் சாந்தகுமாரி, குணரட்னம் கலைவாணி, விக்னேஷ்வரன் சந்திரா, அரவிந்தன் புஷ்பகலா, நந்தகுமார்,ராசதுரை ரஜனிகாந்,பங்கிராஸ் ஜோயல் பிய சீலன், திவ்யகுமார் கிரகபதி, லோகநாகேஸ்வரன் ஜெயராணி, பத்மநாதன் லக்சாந்தி, தயாபரன் அனுசா

**ஆங்கிலம்**

சிலுவைமுத்து ஜோன் செல்வரட்ணம், நகுலேஸ்வரன் அருளினி,கண்ணதாசன் ஜெயராணி,சத்தியசீலன் யுவராணி, அருள்தாஸ் வேலாயுதம் கிறிஸ்ரீனம்மா, லோகநாதன் தவரஜனி. (அ)

"எத்தகைய பாரபட்சமுமின்றி சகல பிள்ளைகளும் எல்லா உரிமைகளுக்கும் உரித்துடையவர்கள், பிள்ளை சம்பந்தமான சகல நடவடிக்கைகளிலும் பிள்ளையின் அதியுயர் நலன்கள் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்"

BMZ மற்றும் CBM அனுசரணையில் LEADS மற்றும் DEFFLINK ஆகியன
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை யாழ் அலுவலகத்துடன் இணைந்து நடாத்தும்



சிறுவர் உரிமைகள் விழிப்புணர்வுக் கண்காட்சி

இன்று இறுதித் தினம்

பங்குனி மாதம் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மைதானச் சுற்றாடலில் (மெதடிஸ்த திருச்சபை வளாகம்)



Organized By LEADS
With the Joint Participation of
Funded by BMZ Federal Ministry for Economic Cooperation and Development cbm together we can do more

# இ.போ.ச. பேருந்தை மறித்து மாணவர்கள் போராட்டம்



(கரவெட்டி)

யாழ். குருநகர் உயர் தொழில்நுட்ப கல்லூரி வட மராட்சி மாணவர்கள் நேற்றுக் காலை இ.போ.ச பேருந்தை இடைநிறுத்தி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் பேருந்தில் அதிகளவான பயணிகளை ஏற்றிச் செல்வ தனால் மாணவர்கள் மயக்கமுற்று விழுவதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக வடமாகாண ஆளுநர், யாழ். அரச அதிபர் மற்றும் இ.போ.ச. தலைமைக் காரியாலயங்களுக்கு உயர் தொழில்நுட்ப வடமராட்சி மாணவர்கள் தமக்கென தனிப் பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறு பலமுறை கோரிக்கை விடுத்துள்ளனர். பருத்தித் துறையில் இருந்து நேற்றுக் காலை 6.45 மணிக்கு 107 மாணவர்களையும் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் பயணிகளையும் ஏற்றி யாழ். நோக்கி சென்று கொண்டிருந்த வேளை ஆவரங்கால் பகுதியில் மூன்று மாணவிகள் மயக்கமுற்றுள்ளனர்.

இதனையடுத்து அப்பேருந்தில் பயணித்த மாணவர்கள் பேருந்தை விட்டு இறங்கி பேருந்தை இடைநிறுத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். 1 1/2 மணித்தியாலங்களுக்கு மேலாக பேருந்தை பயணிக்க விடாது மாணவர்கள் இடைநிறுத்தி வைத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த அச்சுவேலிப் பொலிஸார் மாணவர்களுடன் சுமுகமாக பேசி மாணவர்களின் பிரச்சினை தொடர்பான தீர்வை உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்துவதாகவும் தொடர்ந்தும் பேருந்தில் பயணிக்குமாறும் மாணவர்களிடம் கேட்டுக் கொண்டதை அடுத்து மாணவர்கள் பேரு ந்தில் பயணித்தனர். இதனைத் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி பருத்தித்துறை இ.போ.ச. முகாமையாளரை அழைத்து கலந் துரையாடினார். இதன் பயனாக நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் 750 இலக்க வீதியூடாக 6.30 மணிக்கும் 6.45 மணிக்கும் பயணிக்கும் பேருந்தில் பயணத்தை மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(அ-3-24)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரசசாரயம் விற்ற நபருக்கு யாழ். நீதிமன்றம் மூன்று மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது. யாழ். இராஜசிங்கம் வீதியில் வைத்து சிவிலுடையில் சென்ற பொலிஸார் ஒருவருக்கு 180 மில்லி லீற்றர் அரச சாரயத்தினை நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக 200 ரூபாவுக்கு விற்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மேற்குறித்த இடத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த நபரினை யாழ். பொலிஸார் கைது செய்து அன்றைய தினமே யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினார். வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிவான் மா.கணேசராசா குறித்த நபர் குற்றத்தினை ஒப்புக் கொண்டமையினால் 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

அபராதத் தொகை செலுத்தத் தவறியமையால் குறித்த நபர் 3 மாத சிறைத் தண்ட னையை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-4)

## தூரநோக்கற்ற செயற்பாடுகளால் நட்புறவு நாடுகள் வெறுப்படைந்துள்ளன

(கொழும்பு)

தூரநோக்கற்ற செயற்பாடுகள் காரணமாக பல நட்புறவு நாடுகள் வெறுப்படைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற வைபவமொன்றின் போதே இதனைத் தெரிவித்துள்ளார். தேசப்பற்றாளர்களை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றும் யுகமொன்று உருவாகியுள்ளதாக குறிப்பிட்ட கரு ஜயசூரிய எந்த விதத்திலாவது நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுமாயின் அதற்கு இடமளிக்க இயலாது என்றும் குறிப்பிட்டார்.

ஜெனீவா செல்வதால் நாட்டிற்கு பாதிப்புக்கள் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது. இந்த விடயங்களின் ஊடாக நாட்டில் நிலவுகின்ற பாரிய பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு முற்படுவார்களாயின் அதனை தவறான செயற்பாடாகவே தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் துரதிர்ஷ்டவசமாக நட்புறவு நாடுகளை பகைத்துக் கொண்டுள்ளதாகவும் மனித உரிமைகள் தொடர்பிலும் பத்திரிகை சுதந்திரம் தொடர்பிலும் எவரேனும் பேசுவார்களாயின் அவர்கள் மீது புலி முத்திரை பதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டினார்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசுடைமையின் போது செயற்படும் முறை தொடர்பில் குறிப்பிடப்படுவதுடன் சண்டியர்கள் போல் செயற்படுவதன் ஊடாக அதனை முன்னெடுக்க முடியாது. இராஜதந்திர ரீதியில் செயற்பட வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(அ-7)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

- 3 ஆம், 4 ஆம் வருடம் வணிகமாணி/ தொழில் நிர்வாக மாணி- இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2010
- 1 ஆம், 2 ஆம் வருடம் வணிகமாணி/ தொழில் நிர்வாக மாணி- இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 2010
- 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வருடம் (புதிய கட்டமைப்பு) தொழில் நிர்வாகமாணி- முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 12.03.2012 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 19.03.2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
09.03.2012 (சி-6048)



## நல்லூர் பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்- 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

01.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-12.03.2012 தொடக்கம் 26.03.2012 பி.ப. 4.00 மணிவரை

02.கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 27.03.2012 மு.ப. 10.00 மணிவரை

03.கேள்வி திறக்கப்படும் திகதி :-27.03.2012 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

04 கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

06 கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்,யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.


08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | அரியாலை கிழக்கு இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |
| 02 | கோட்டைக்காடு இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |
| 03 | திருநெல்வேலி இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை
கொக்குவில் (சி-6047)

திரு.ப.வசந்தகுமார்
தவிசாளர்.

# கள்ளங்கபடமற்ற தன்மையும் புத்திசாலித்தனமும்



ஆன்மீகம் 01

**நாம்** இந்த உலகிற்கு நிர்மலம் (மாசில்லாமல்) என்னும் அற்புதப் பரிசோடு வந்தோம். ஆனால், படிப்படியாக நம் அறிவு வளர வளர நாம் அந்த நிர்மலத்தை இழந்து விட்டோம். நாம் மௌனத்துடன் பிறந்தோம். ஆனால், நாம் வளர வளர மௌனத்தை இழந்து வார்த்தைகளால் நிறைக்கப் பெற்றோம். நாம் இதயத்தில் உணர்வுகளுடன் வாழ்ந்தோம். காலம் செல்லச் செல்ல நாம் புத்தி பூர்வமாக மட்டுமே வாழ ஆரம்பித்து விட்டோம்.

புறப்பட்ட இடத்திற்கே திரும்ப வரும் பயணம்தான் ஞானசித்தி, இந்தப்பயணம், தலையிலிருந்து (புத்தியிலிருந்து) இதயத்திற்கு- வார்த்தைகளிலிருந்து மௌனத்திற்கு- நம் புத்திக்கூர்மையைத் தக்க வைத்துக்கொண்டே கள்ளங்கபடமற்ற தன்மைக்குச் செல்வதாகும்.

அறிவு உன்னை அந்த அழகான **எனக்குத் தெரியாது** என்ற நிலைக்கு அழைத்துச் செல்லவேண்டும். அறிவின் இலக்கு ஆச்சரியமே. முழுமையான அறிவு உன்னை வியப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் இட்டுச் செல்லும். அது உன்னை இந்த உயர்ந்த உணர்வு நிலையை உணரச் செய்யும்.

மர்மங்கள் உணரப்பட வேண்டியவை. புரிந்துகொள்ளப்பட வேண்டியவை அல்ல. அவை உன்னை அழகற்ற **எனக்குத் தெரியாது** நிலையிலிருந்து, அழகான **எனக்கு எதுவும் தெரியாது** நிலைக்குக் கொண்டுபோகும். நம் அறிவு வளர வளர நமது மாசில்லாத் தன்மையை இழக்க நேரிடலாம். ஒரு அறிவாளியின் நேர்மையற்ற தன்மைக்கும் ஒரு அறிவிலியின் கள்ளங்கபடமற்ற தன்மைக்கும் எந்த மதிப்புமில்லை. ஆனால், ஞானத்தில் உள்ளவனின் மாசில்லாத் தன்மைக்கு மதிப்பு உண்டு.


ஒருவனால் செயல்களிலிருந்தும் நிகழ்வுகளிலிருந்தும் விலகி தன்னை உணர முடிந்தால், அது மிகவும் உத்தமம்; அது மிகவும் சுலபமானதும் கூட. ஒருவன் தன்னுடைய கள்ளங்கபடமற்ற தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளக் கடினமாக பிரயத்தனம் செய்ய வேண்டாம். ஒரு அறிவிலி எனக்குத் தெரியாது என்று ஒரு போதும் சொல்லமாட்டேன். ஒருவன் ஞானத்தின் வழி செல்கையில் எனக்கு எதுவும் தெரியாது என்ற மேலான நிலைக்குச் செல்கிறான். அது மிகவும் **அழகான, எனக்கு எதுவும் தெரியாது** என்ற நிலை!

கற்கக் கற்க கல்லாதவை அதிகம் என்பது புலப்படுகிறது. அது எந்தத் துறையானாலும் சரி-இசை, விஞ்ஞானம் அல்லது கலைகள். இதனுடன் அழகான எனக்கு எதுவும் தெரியாது எனும் நிலை வருகிறது. அதுதான் கள்ளங்கபடமற்ற தன்மை. அறியாமை தன்நிலையிலிருந்து ஞானத்தின் வழி செல்கையில், மேலான நிலைக்குச் செல்கிறது. அதுதான் அழகிய எனக்கு எதுவும் தெரியாது நிலை.

ஆச்சரியத்தில் ஸ்தம்பித்துப் போதல் ஆன்மீகப் பாதையில் முதன் நிலை. இந்தப்படைப்பு(சிருஷ்டி) பற்பல அதிசயங்கள் நிறைந்தது. ஆனால், நாம் அவற்றைக் கவனிப்பதே இல்லை. ஏதோ எங்கோ நடப்பதாக நினைத்துக்கொள்கிறோம். அப்போது நமக்கு சோம்பல் வருகிறது. செயலற்ற தன்மையும் அறியாமையும் வருகிறது. ஓர் அதிசய உணர்வு நம்முள் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. ஓர் அதிசயம் நம்மில் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அதிர்ச்சி விழிப்படையச் செய்கிறது. நாம் விழிப்படையும் போது இந்த முழு உலகமே அதிசயங்களால் நிறைந்திருப்பதைக் காண்கிறோம். இந்த முழுப்படைப்புமே (சிருஷ்டி) பிரமிக்கத்தக்கது. ஆச்சரியப்படத்தக்கது; அதிசயப்படத்தக்கது. ஏனெனில், இவை அனைத்துமே ஒரே மெய்யுணர்வின் வெளிப்பாடுகள்- அதே பேருணர்வுதான், விளக்கில் பிராணவாயுவால் எரிகிறது; ஒளி தெரிகிறது. வாழ்க்கைக்கும் விளக்குக்கும் இடையே என்ன ஒற்றுமை?

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்



கைரேகைப் படம்

கைகள் அந்தரத்தில் காணப்படுமேயானல் படபடப்பான் யோசனையும் எதையும் அதி சீக்கிரம் செய்ய வேண்டும் என்ற எண்ணமுள்ளவர். கூர்மையான புத்தியுள்ளவர். எவ்வளவு மெதுவாகப் பேசினாலும் நுட்பமாகக் கோடிடுவர். மிக்க உணர்வுடையவர்.

இரண்டு கரங்களும் குறிப்பிட்ட, இடமில்லாமல் மேலும் கீழுமாக அசைந்த வண்ணம் இருக்குமேயானால் இவைகளெல்லாம் நிலையில்லா நெஞ்சத்தைக் குறிப்பிடுகின்றன. திடீரென வேகமாக எண்ணம் உதிக்கும். அடக்கியாளும் மனமாவது, புத்தியாவது இராது. இத்தகையோருக்கு கடின சித்தமுடைய மற்றவர்கள் வழிகாட்ட வேண்டும் என்றாலும் நன்னடத்தையும் யோகமும் உள்ளவராவர்.

விரல்கள் நன்றாக மடக்கப்பட்டிருப்பதாயின் குறிப்பிட்ட தீர்மானத்தில் மனம் அழுந்தி ஆலோசனையிலிருப்பதை குறிக்கும். கை கெட்டியான மணிக்கட்டோடு முஸ்தீப்பாய் இருப்பதாயின் ஒரே விடயத்தைப் பற்றியே யோசனை என்பதும் இதர சங்கல்பம் சிந்தனைக்குச் செல்ல இடமில்லை என்பதும் விளங்கும். விரல்களைச் சாமானியமாக மூடிக் கொண்டிருந்தாலும் கூட ஒரே குறிப்பு-தீர்மானம்-உள்ளவர் என்பதைப் புலப்படுத்தும். கை விரல்களை உள்ளங்கையில் அழுத் திக் கொண்டிருந்தால் உத்வேகம்- ஆவேசம்- உள்ளவர் என்பதைக் குறிக்கும். ஆனால், இது காலத்திற்குட்பட்டு சமயோசித மாயிருக்குமேயன்றி வழக்கத்திற்குட்படாது.

கவனிப்பார். இத்தகையோர் அதி ஜாக்கிரதையும் கூர்ந்து கவனிக்கும் தன்மையுடையவர். ஆராய்வதிலேயே புத்திநாட்டமுள்ளதாயிருக்கும்.

இரண்டு கைவிரல்களையும் நன்றாக மடக்கி வேகங்காட்டி நடக்கும் பாவனையிலிருப்பவர் எதைச் சொன்னாலும் தர்க்கம் செய்து மறுத்துப் பேசுவர். இத்தகையோரிடம் உறுதியாய் பேசிச் சொன்னதையே நிலைநிறுத்த வேண்டும்.

இரண்டு கைகளையும் ஒன்றுக்கொன்றாய்க் கைகழுவும் பாவனையில் மாற்றிக் கொண்டுருப்பவராயின் இவர் பேசும்போது முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைப்பதுபோல விவரிப்பவர். இவரிடம் உண்மையைக் கண்டு பிடிக்க முடியாது. பேசுவதெல்லாம் நம்பத்தகாததும் பொய்யாகவுமே இருக்கும். மிக்க ஆடம்பரத்துடனிருப்பார். மற்றவர்களிடமுள்ள குணதோசங்களைக் கண்டு பேசுவதே வழக்கமாயிருக்கும்.

# ரேகைகளும் கிரகங்களும்

இரண்டு கைகளையும் நீட்டியிருக்கும் இத்தகையோர் முன், எதையேனும் கைக்கு நெருக்கமாகக் கொண்டு போனாற் தொடாமலே உடனே கைகளை உள்ளடக்கிக் கொள்வர். உயிர்ப்புள்ள விரல்களாயின் இடம்மாறிக் கொண்டே இருக்கும். தன்னைப்பற்றி மற்றவர் என்ன நினைக்கிறாரோ என்ற சந்தேகமுள்ளவர். சுற்றுமுற்றும் பார்க்கும் போதும் சந்தேகத்தோடே

இடக்கரத்தை மறைத்து வலக்கரத்தை இடுப்புக்கு மேலே நேரே மேல் நோக்கி வைத்துக் கொண்டு, துடுக்கும் கர்வமுமுள்ளதாய், மிக்க கம்பீரமாய் நடக்கும் பாவனையிலுள்ள இத்தகையோர் தன் காரியத்தில் கண்ணாயுள்ளவர். தன் கௌரவத்தைத்தளரவிடாமல் காத்துக் கொண்டு, தக்கோரிடம் சுலபமாய்ப் பழகுந் தன்மையுடையவராயிருப்பர். பெருத்த, கனத்த கைகளையுடையதும், கைகள் நீண்டனவாகத் தோன்றும் இத்தகையோருக்கு ஸ்தூல புத்தி அதிகம். ஆழ்ந்த சிந்தனை இராது. இவரை யோசனை சொல்லி உயர்த்த முடியாது. தன் சுற்றத்தாரின் க்ஷேமாபிவிருத்தியைக் கோரியவராயிருப்பார்.

பின் பக்கமாக இரண்டு கைகளையும் கோர்த்து வைத்துக் கொண்டு நடக்கும் பாவனையுடையவர் ஆராயும் நோக்கம், ஏதோ கூடாது என்பதில் மிக ஜாக்கிரதையோடுங் கூடிய கவனமுமுடையவாயிருப்பர். எதையும் குறிப்பிட்டுப்பார்க்குமுன் பூமியை நோக்குவர். சாந்தமும் களங்கமுமற்ற மனது முடையவர். தான் எதிலும் அகப்பட்டுக் கொள்ளாது தற்காப்புக்குள்ள நுண்ணறிவுள்ளவர்.

இடுப்பில் இருகைகளையும் வைத்துக் கொண்டு நடப்பது மிக்க அதீத ஞானத்தையும் கம்பீரத்தையும் குறிக்கும். முக்கியமாய் முற்றுந்துறந்த ஞானிகளும் இவ்வுலகைத் துச்சமாய் மதித்துத் தன்னல மற்று பொது ஜனங்களின் க்ஷேமா விருத்தியைக் கோரும் இராஜீய வாதிகளும் இரு கரங்களையும் தக்கசமயத்தில் இடுப்பில் வைத்துக் கொள்வர்.

இடுப்பில் இடக்கரத்தை மாத்திரம் வைத்து நடப்பது அதிகார தோரணையைக்காட்டும்.

(தொடரும்)

13 வயது சிறுமி

# நெடுந்தீவில் நடந்த கொடூரக் கொலை



ஆனால் மார்ச் 3 ஆம் திகதி அவருக்கு இறுதியான நாள் என அவர் மட்டுமல்ல யாருமே எண்ணியிருக்க மாட்டார்கள்.

நடந்தது என்ன?

அன்று சனிக்கிழமை. பாடசாலை விடுமுறை. அனைவரும் வீட்டுள் தான் இருந்தனர் அவர்களின் கொட்டில் வீடு கல்வீடாக மாற்றப் படும் வேலைகள் நடைபெறுகின்றன. இதனால் தாய், தந்தை மற்றும் மூத்த சகோதரன் ஆகியோருக்கு அதிக வேலைப்பளு. மூத்த சகோதரி உயர் தரப் படிப்பை மேற்கொள்வதால் அவர் ரியூசனுக்குச் சென்றுவிட்டார். ஏனைய சகோதரர்கள் வீட்டில் தான் இருந்தனர்.

அது ஒரு அழகிய கிராமம். தனித் தனியான அரச அலுவலகங்கள் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன. அந்தக் கிராமம் நீண்டதும், நீண்டதூரத்தில் இருப்பதாலோ என்னவோ அதற்கு ஏற்றாற்போல் பெயரும் அமைந்துள்ளது. அதுதான் நெடுந்தீவுக் கிராமம் அது கிராமமாக இருந்தாலும் நகரம் போலவே அதன் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

அந்த கிராமத்தில் மார்ச் 3 ஆம் திகதி இடம்பெற்ற கொடூரச் சம்பவம் அனைவரையும் ஒரு கணம் அதிரவைத்துள்ளது.

நெடுந்தீவு மக்கள் மட்டுமன்றி இலங்கைத்தமிழ் மக்கள் அனைவரிடத்தும் அந்தச் சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவி யேசுதாசன் லக்சினியின் கொலைச்சம்பவமே அது. லக்சினி பாலியல் வல்லுறவுக்குப் பின் அடித்துக் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தில் வசித்து வருகிறார் யேசுதாசன். அவர் ஒரு கூலித்தொழிலாளி. குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பொருட்களை தனது மாட்டு வண்டிலில் ஏற்றி உரியவரின் இடத்தில் இறக்குவதே அவரது தொழில். இவரது மனைவி பிரிடா கிலாறா. யேசுதாஸன்-பிரிடா கிலாறா தம்பதியினருக்கு ஏழு பிள்ளைகள். அதில் லக்சினி (வயது - 13) நான்காவது பிள்ளை.




லக்சினியின் சகோதரர்கள்

கஜேந்திரன், திலசினி, கொட்வின், பஸ்மிலன், மைக்கன், ஜென்சி ஆகியோர் லக்சினியின் சகோதரர்கள்.

இவர்களில் லக்சினி தான் சுட்டிப்பிள்ளை. பாடசாலை முதல் வீடு வரை என்ன வேலை என்றாலும் திறமையாகச் செய்யக் கூடியவர்.

'படிப்புமுதல் விளையாட்டு மற்றும் நானாவித வேலைகள் என சகலதிலும் லக்சினி தான் பெஸ்ற். பாடசாலை விடுமுறை நாட்களில் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதிலும் அவர்தான் பொறுப்புள்ள பிள்ளை. ஆறு சகோதரர்கள், தாய், தந்தை என அச்சிறுமியின் வாழ்க்கை சந்தோசமாக சென்று கொண்டிருந்தது.





அன்று மீன் வாங்கவேண்டும் என தாயார் கூறுகிறார். அண்ணாவுக்கு வேலை. அக்காவும் வீட்டில் இல்லை. அதனால் லக்சினியை அழைக்கிறார் அம்மா. 100 ரூபாயை கையில் கொடுத்து மீன் வாங்கி வருமாறு அன்புக் கட்டளையிடுகிறார். தனது நாளாந்தக் கடமைகளை முடித்துக் கொண்ட லக்சினி காலை 9 மணியளவில் சைக்கிளை எடுத்துக் கொண்டு சந்தைக்கு புறப்பட்டுவிட்டார். 1/2 மணிநேரம் கடந்த நிலையில் லக்சினியின் சக மாணவி ஒருவர் வீட்டிற்கு வந்து அவரைத் தேடுகிறார். "பாட்டுப்பழகவேண்டும் அவரை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன்." என லக்சினியின் நண்பியின் குரல் ஒலிக்கிறது.

"அவ சந்தைக்கு மீன் வாங்குவதற்காக சென்று விட்டார்." இது தாயின் பதில். தனது நண்பியை சந்திப்பதற்காக மீன் சந்தைக்கு விரைகிறார் அந்த அன்பு நண்பி.

சந்தையில் நீண்டநேரமாக நின்று சுற்றுப்புறம் முழுவதுமாக தனதுநண்பியான லக்சினியைத் தேடுகிறது.பாசமுள்ள அந்தச் சின்ன உள்ளம். ஆனால் அங்கு அவரைக் காணவில்லை. சந்தையில் சனமும் இல்லை. மீன் வியாபாரமும் அன்று நடைபெறவில்லை.



லக்சினியின் தந்தை

"எனக்குச் செல்லப்பிள்ளை லக்சினி. அவளை நான் இழந்து விட்டேன்" எனது பிள்ளைக்கு இப்படி செய்து விட்டானே. எனது பிள்ளையின் சடலம் கிடந்த இடத்தில் சாராயப் போத்தல் இருந்தது. கொடுத்துவிட்ட காசு கூட அவரது கையில் காணப்பட்டது. ஆடைகள் கலைந்து காணப்பட்டன. தலையின் பின்பகுதி சிதைந்திருந்தது. கழுத்து நெரிக்கப்பட்டிருந்ததாக என்னிடம் சொல்லப்பட்டது. எனது மகளின் இழப்பை என்னால் தாங்க முடியவில்லை.

"ஒருவரும் இல்லாத இடத்தில் என்ன செய்கிறாய்" தேடிச்சென்ற நண்பியின் உறவினர் ஒருவர் அவளைக் கடிந்து கொள்கிறார். "நான் லக்சினியை தேடி வந்தனான் அவரை காணவில்லை" எனக் கூறிவிட்டு நண்பி வீடு திரும்பினாள்.

மதியம் கடந்துவிட்டது மகளைக் காணவில்லை என பெற்றோர்கள் தேடவில்லை. அவர் நண்பியுடன் பாட்டுப் பழக போய் இருப்பார் என எண்ணி பெற்றோர் இருந்துவிட்டனர்.

"கச்சதீவுப் பெருவிழா நடை பெறுவதால் அன்று மீன் வியாபாரம் நடை பெறவில்லை. அதனால் மகள் நண்பியுடன் சென்றிருப்பார் என எண்ணினோம் எனக் கதறினார் அந்தப் பிஞ்சை இழந்த தாய்.

### இடியாய் இல்லாமல் வந்த தகவல்

மாலை நான்கு மணி இருக்கும் "9 ஆம் வட்டாரத்தில் ஒரு சிறுமியின் உடல் கிடக்கிறது" என்ற தகவல் லக்சினியின் தந்தையின் காதை எட்டுகிறது. அந்தத் தந்தையின் உள்ளம் அதனை பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. பொழுது கழிந்து கொண்டிருக்கிறது. காலையில் போன மகளை காணவில்லை என தந்தையின் மனம் திடீரென அச்சம் அடைகின்றது.

எனது மகளுக்கு எதுவும் நடந்திருக்காது என எண்ணியிருந்த தந்தை சடலம் கிடந்த 9 ஆம் வட்டாரம் அன்னம்மாள் பாடசாலைக்கு அருகில் சென்றார்.



லக்சினியின் தாய்

எனது மகளை சந்தேக நபரான...... அழைத்துச் சென்றதை உறவினர்கள் கண்டுள்ளனர். சந்தையில் மீன் இல்லாததால் மீன் வாங்கித் தருவதாக பிரஸ்தாபநபர் எனது மகளை அழைத்துச் சென்றுள்ளார். இதனை எனது உறவினர்கள் கண்டுள்ளனர். அவர் தான் எனது மகளை கொலை செய்துள்ளார்.

அங்கு சென்ற தந்தைக்கு இடியென விழுந்தது பேரதிர்ச்சி. மகள் கொண்டு சென்ற 100 ரூபா கையில் இறுக்கப்பட்டிருக்கிறது. ஆடைகள் கிழிந்து கிடக்கின்றன. அநாதரவான நிலையில் சற்றுத்தள்ளி அவர் கொண்டு சென்ற சைக்கிள் காணப்படுகின்றது. தலையின் பின்புறம் சிதைந்து காணப்படுகிறது. தனது மகள் இங்கு இந்நிலையில் எவ்வாறு என கதறி அழுகிறார். தனது மகள் தான் எனஉறுதிப்படுத்தினார் தந்தை யேசுதாசன்

## நடந்தது என்ன?

### சடலம் கண்டுபிடிப்பு

நெடுந்தீவு 9 ஆம் வட்டா ரத்தில் வசிக்கும் குடும்பப்பெண் ஒருவர் சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் விறகு வெட்டச் செல்வது வழக்கம். அன்றும் தனது சமையல் வேலைகளை முடித்துக் கொண்டு பிற்பகல் 2.30 மணியளவில் விறகு வெட்டச் சென்றுள்ளார். அப்போது சிறுமி ஒருவர் சடலமாக கிடப்பதை கண்ட அவர் உடனடியாக நெடுந்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். உடனடியாக விரைந்து வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். அதனால் சிறுமி யின் வீட்டுக்கு இத்தகவல் 4 மணிக்கே கிடைத்துள்ளது



### அதிர்ச்சியில் கச்சதீவு

கச்சதீவுப் பெருவிழாவுக்கு நெடுந்தீவு மக்கள் அதிகளவில் செல்வது வழக்கம். அதனால் சம்பவ தினத்தன்று நெடுந்தீவில் மக்கள் குறைவாகவே காணப்பட்டனர். இந்நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட சில நிமிட நேரத்தில் கச்சதீவுக்குச் சென்றவர்களுக்கு தகவல் பறந்தது. இத்தகவலை அடுத்து அங்கு நின்றவர்கள் பேரதிர்ச்சி அடைந்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடையவரை பிடிக்குமாறும் ஆலோசனை வழங்கினர்.

## நேரடி விசிட்

**நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி (வயது 13) மார்ச் மாதம் 13 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டபின் படுகொலை செய்யப்பட்டார்.**

**இவரது சடலம் நெடுந்தீவு 9 ஆம் வட்டாரத்தில் சன நடமாட்டம் அற்ற பகுதியில் உள்ள பற்றை ஒன்றுக்குள் இருந்து மீட்கப்பட்டது. இது தொடர்பான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.**

### சந்தேக நபர் கைது

சம்பவம் இடம்பெற்ற அன்றிரவு 10 மணியளவில் சந்தேகநபர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு நையப் புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சந்தேகநபர் ஏற்கனவே பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர் என்றும் அவற்றில் சில சம்பவங்களுக்காக விளக்கமறியலில் இருந்தவர் என்றும் பொதுமக்கள் கூறினர்.

### ஆர்ப்பாட்டம்-கர்த்தால்

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தப்பிச்சென்று விட்டதாக தகவல் வெளியானதையடுத்து மறுநாள் மார்ச் 4 ஆம் திகதி மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சந்தேகநபரை தங்களுக்கு காட்டவேண்டும் எனவும் நீதிமன் றில் ஆஜர்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

**எஸ்.கே.எஸ்.தீபன்**

இந்நிலையில் அச்சந்தேகநபரை பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காட்டியதுடன் அவரை நீதிமன்றிலும் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 65

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை



ஸ்ராலின் கிராடிலுள்ள -86 அடி உயரமான தாய் நாட்டைக் கௌரவப்படுத்தும் மாதாசிலை

200 பகல்களும் இரவுகளும் நீடித்த மாபெரும் சமரின்போது பாசிசக் கூட்டு, அச்சமயத்தில் சோவியத்-ஜேர்மனியப் போர்முனையில் இயங்கி வந்த சக்திகளில் கால்ப்பங்கை இழந்தது. ஜேர்மனி மொத்தமாக (இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், சிறைப்பிடிக்கப்பட்டவர்கள், தொலைந்து போனவர்கள்) 15 இலட்சம் போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் இழந்தது. ஸ்ராலின்கிராட் அருகில் மட்டும் 1942 நவம்பர் 19 முதல் பெப்ரவரி 2 வரை பாசிச ஜேர்மனியத் துருப்புகள், 8இலட்சத்துக்கும் கூடுதலான ஆட்களையும் 2 ஆயிரம் வரையிலான டாங்கிகள் மற்றும் திடீர்த்தாக்குதல் பீரங்கிகளையும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் சுமார் 3 ஆயிரம் போர், சரக்கு விமானங்களையும் 70 ஆயிரத்துக்கும் கூடுதலான வாகனங்களையும் இழந்தன. வேர்மஹ்ட் 32 டிவிசன்களையும் 3 பிரிகேடுகளையும் முற்றிலும் இழந்தது. 16 டிவிசன்கள் கடுந்தோல்வியடைந்தன. ஸ்ராலின்கிராட் அருகே சுற்றி

ஸ்ராலின் கிராட்டுக்குக் கிடைத்த வீரத்திருநகர் பதக்கம்



வளைக்கப்பட்ட எதிரியை ஒழிக்கும் போது 22 ஜேர்மனிய டிவிசன்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இக்காலத்தில் டோன் சேனை 2500 இற்கும் கூடுதலான இராணுவ அதிகாரிகள், 24 ஜெனரல்கள் உட்பட 91 ஆயிரம் போர்வீரர்களையும் இராணுவ் அதிகாரிகளையும் சிறைப்பிடித்தது. சுற்றிவளைக்கப்பட்ட படைத் திரட்டு ஒழித்துக்கட்டப்பட்டபின் போர்க்களத்தில் சுமார் 1இலட்சத்து 40 ஆயிரம் ஜேர்மனியப் போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகளின் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டு புதைக்கப்பட்டன. எதிரியிடமிருந்து போர்த்தந்திர முன் முயற்சியைப் பிடுங்கிய சோவியத் துருப்புகள் இதை யுத்தம் முடியும் வரை தம் கரங்களிலேயே வைத்திருந்தன.

ஸ்ராலின்கிராட் அருகே சோவியத் மக்களும் இராணுவமும் அடைந்த மாபெரும் வெற்றி மனித குலத்தின் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும். இங்கே புகழ்மிகு வீரத் திருநகரின் வாயில்களில் அடைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கை, ஹிட்லர் எதிர்ப்புக்கூட்டணியைச் சேர்ந்த நாடுகளின் மக்களுக்கு ஆதரவாகத் திருப்பியது. உலகம் முழுவதும் வோல்காவில் நடந்த சமரை மூச்சை அடக்கிக் கொண்டு கவனித்தது. வாஷிங்டனிலும் லண்டனிலும் பாரிசிலும் பெல்கிரேட்டிலும் பெர்லினிலும் ரோமிலும் எல்லா இடங்களிலும் மக்கள், யுத்தத்தின் போக்கு இங்கே தீர்மானிக்கப்படுகிறது என்பதை உணர்ந்தனர்; புரிந்து கொண்டனர். இது நமது எதிரிகளுக்கும் சரி, நமது நேச நாடுகளுக்கும் சரி இருவருக்குமே தெளிவா்யிருந்தது...

ஹிட்லர் துருப்புகளில் மிகச் சிறந்தவை இங்கே நொறுக்கித் தள்ளப்பட்டதில் மட்டும் விடயம் அடக்கியிருக்கவில்லை. இங்கே பாசிசத்தின் தாக்குவேகம் அடக்கப்பட்டது. தார்மீக பலம் உடைக்கப்பட்டது.

வோல்காவில் நடந்த சமருக்குப் பின் யுத்தம் இரண்டு ஆண்டுகளுக்கும் கூடுதலாக நீடித்தது. இன்னமும் பலவற்றை தாங்க வேண்டியிருந்தது. ஏராளமானவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. ஆனால், நிகழ்ச்சிகளின் போக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பின்னால் நடந்த சமர்கள் ஏகாதிபத்தியத்தின் முக்கிய தாக்குதல் சக்திகளின் முறியடிப்பை முடித்து வைத்தன என்று, லி.இ.பிரேஷ்னெவ் கூறினார்.

சோவியத், ஜேர்மனிய பொது மக்களிடையே உற்சாகமும் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி நாடுகளில் ஆனந்தக்களிப்பும் நிலவிய அந்த மறக்கவொண்ணா நாட்களில் பல அரசுகளும் அரசியல் பிரமுகர்களும் சோவியத் யூனியன் அடைந்த மிகச் சிறந்த வெற்றியை உயர்வாக மதிப்பிட்டனர். ரூஸ்வெல்ட் ஸ்ராலினுக்கு அனுப்பிய செய்தியில்- இது 1943 பெப்ரவரி 5 இல் பெறப்பட்டது- "ஸ்ராலின்கிராட் சமரை மகாகாவிய போராட்டம் என்றும் இதன் தீர்மான கரமான முடிவை எல்லா அமெரிக்கர்களும் கொண்டாடிக் கொண்டிருந்தனர்" என்றும் எழுதினார். பின்னால் இவர் ஸ்ராலின்கிராட்டிற்கு பின்வருமாறு எழுதப்பட்ட நற்சான்றிதழை அனுப்பினார். "ஸ்ராலின் கிராட் நகரின் துணிவு மிக்க பாதுகாப்பாளர்களுக்கு *எங்களுடைய பாராட்டைத் தெரிவிப்பதாக* அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களின் சார்பில் அந்த நகருக்கு இந்த நற்சான்றிதழை வழங்குகிறேன்." *1942* செப்ரம்பர் 13 முதல் 1943 ஜனவரி வரை நீடித்த முற்றுகையின்போது அவர்கள் காட்டிய வீரமும் தார்மீக. பலமும் செய்த தியாகமும் எல்லா சுதந்திர மக்களின் உள்ளங்களையும் என்னென்றும் உற்சாகப்படுத்தும். இவர்களது புகழ்மிகுவெற்றி, தாக்குதல் அலையை தடுத்து நிறுத்தி, ஆக்கிரமிப்பிற்கு எதிரான நேச நாட்டு மக்களின் யுத்தத்தில் திருப்புமுனையாக அமைந்தது

கிராட் பிரிட்டனின் பிரதமர் வி. சர்ச்சில், "ஸ்ராலின்கிராட் அருகே சோவியத் இராணுவம் அடைந்த வெற்றியை அற்புதமானது" என்று குறிப்பிட்டார். *கிரேட்பிரிட்டனின் அரசர் ஸ்ராலின்கிராட்டிற்கு வாள் ஒன்றை பரிசாக அனுப்பினார்.* அதில் ருஷ்ய, ஆங்கில மொழிகளில் பின் வருமாறு பொறிக்கப்பட்டிருந்தது. *அதாவது, இரும்பைப் போன்ற உறுதிகொண்ட ஸ்ராலின்கிராட் வாசிகளுக்கு- பிரிட்டிஷ் மக்களின் பேருவகையின் அடையாளமாக ஆறாம் ஜார்ஜ் மன்னிடமிருந்து.* எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. சமரின் போது, குறிப்பாக இது நடைபெற்று முடிந்தபின், பாசிச ஜேர்மனிக்கு எதிரான போராட்டத்தில், சோவியத் யூனியனுக்கு அதிக செயல்பூர்வமான உதவியை அளிப்பதற்காக மேலைய நாடுகளிலிருந்த சமூக நிறுவனங்கள் சுறுசுறுப்பாக செயற்படத் தொடங்கின. உதாரணமாக நியூஜார்க் நகரத் தொழிற்சங்க உறுப்பினர்கள் ஸ்ராலின் கிராட்டில் மருத்துவ மனையைக் கட்டுவதற்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் டொலர்களை திரட்ட முடிவுசெய்தனர். மாபெரும் மக்களின் இறவாப் புகழ் பெற்ற வீரத்தின் அடையாளமாக வரலாற்றில் வாழப்போகும் ஸ்ராலின்கிராட் உடன் நியூஜோர்க்கின் தொழிலாளர் உறவை ஏற்படுத்திக்கொள்வது குறித்து நாங்கள் பெருமை கொள்கிறோம். இந் நகரின் தற்காப்பு, ஒடுக்குமுறைக்கு எதிரான மனிதகுலப் போராட்டத்தில் திருப்பு முனையாக அமைந்தது... தனது சோவியத் பூமியைப் பாதுகாத்து நிற்கும் ஒவ்வொரு செஞ்சேனை வீரனும் நாஜிப்படையாளைக் கொல்வதன் மூலம் அமெரிக்கப் போர்வீரர்களின் உயிரையும் காப்பாற்று கிறான். சோவியத் நேசநாட்டிற்கு எங்களது கடனைப்பற்றி கணக்கிடும் போது இதை பற்றி நினைவு கொள்வோம் என்று தையற்காரர் கூட்டுச் சங்கத் தலைவர் அறிவித்தார்.

முன்னாள் பாசிச ஜேர்மனிய ஜென ரல்கள்கூட ஸ்ராலின் கிராட் அருகே நடந்த சமரின் பெரும் இராணுவ- அரசியல் முக்கியத்துவத்தை ஒப்புக் கொள்கின்றனர். ஹிட்லர் ஜெனரல் டியோர் பின்வருமாறு எழுதினான். "ஸ்ராலின் கிராட் அருகே நடந்த சமர் ஜேர்மனியின் வரலாற்றில் கடுமையான ஒரு தோல்வியாகவும் ருஷ்யாவிற்கு ஒரு மகத்தான வெற்றியாகவும் அமைந்தது." பல்தாவா அருகே ருஷ்யா மாபெரும் ஐரோப்பிய வல்லரசு என்று சொல்லிக்கொள்ளும் உரிமையை வென்று பெற்றது உலகின் மாபெரும் இரு வல்லரசுகளில் ஒன்றாக மாறுவதற்கான தொடக்கமாக ஸ்ரா்லின் கிராட் அமைந்தது.

(தொடரும்)




ஜோசெப் ஸ்ராலின், சோவியத்யூனியனின் தலைவர் (19.யூலை.1941-1953மார்ச்,5) உயர்இராணுவக் கட்டளைத் தளபதி (1943-1953)



போருக்குப்பின் ஸ்ராலின் கிராட் நகரின் தோற்றம்

# அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட எந்த பிரேரணையும் தோற்ற சரித்திரமில்லை

## சுரேஸ், சுமந்திரன் எம்.பிக்கள் விளக்கம்




(கொழும்பு)

அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட எந்தப் பிரேரணையும் தோற்றதாக சரித்திரமில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்து அமெரிக்கா முன் வைத்துள்ள பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. அமெரிக்காவின் பிரேரணை இலங்கைக்கு எதிரானதல்ல. அது இலங்கைக்குநன்மை தரக் கூடியதொன்றாகவே அமையும்.

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையொன்று தோல்வியடைந்ததாக சரித்திரமே இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையானது இலங்கைக்கு எதிரானதொன்றல்ல. இலங்கை அரசாங்கத்தில் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தக் கோரும் பிரேரணையேயாகும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் பிரேரணை குறித்து கருத்து கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது, இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை அமுல்படுத்துவது தொடர்பாகவே அமெரிக்காவினால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


இது இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான பிரேரணையல்ல.அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புக்கூறும் விடயத்தில் சரியான தீர்மானங்களை எடுக்கவில்லை என்று இந்தப் பிரேரணையில் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைவிட ஏனைய அனைத்து விடயங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டுடன் தொடர்புடையது.

பரிந்துரைகளை அமுல்படுத்துவதா இல்லையா என்பது இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயமாகும். இதற்கென கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் இதிலிருந்து தப்பிப்பதற்கான காரணங்களை இலங்கை அரசு இன்றிலிருந்தே தேடத்தொடங்கும். எனவே, இதன்மூலம் எதுவும் நடைபெறும் என்று எண்ணுவதற்கில்லை என தெரிவித்தனர்.

(அ-7)



புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஆசிரியை திருமதி சந்தானலக்சுமி விமலன் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் கௌரவ நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை படத்தில் காணலாம். (படம்:- இருபாலைச் செய்தியாளர்)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் அமெரிக்கா பொறுப்புடன் செயற்படும்

## நாடு கடந்த அரசின் பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழினத்தின் மீது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றம் மானிடத்துக்கு எதிரான குற்றம், இனப்படுகொலை ஆகியவற்றுக்கு பொறுப்புக்கூறும் வகையில் அனைத்துலக சுயாதீன விசாரணைப் பொறிமுறையொன்றை வலியுறுத்தும் வகையிலான காத்திரமான உள்ளடக்கத்தை ஜெனீவாவில் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைபில் எதிர்பார்ப்பதாக நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைச் சபையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து கருத்து தெரிவித்தபோது இக்கூற்றினை அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அமெரிக்காவினால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைபை அங்கத்துவ நாடுகளால் பலப்படுத்தவும் முடியும். பலவீனப்படுத்தவும் முடியும். இலங்கை அரசானது இந்தத் தீர்மான வரைபைப் பலவீனப்படுத்தி தோல்வியுறச் செய்யும் முயற்சிகளை முன்னெடுக்கும்.

இந்த நிலையில் தமிழர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கின்ற சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை வலியுறுத்தும் வகையில் அமெரிக்காவின் தீர்மான வரைபில் காத்திரமான உள்ளடக்கத்தையே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதேவேளை, இத்தகைய விவகாரங்களில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு இருக்கின்ற பொறுப்புள்ள கடப்பாட்டினை இந்த தீர்மானம் தொடர்பாக பேரவை பொறுப்புடன் ஆற்றும் என்றும் நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# அமைச்சர் தொண்டமான் குறித்த தகவல்கள் வெளியிடப்படும்

## மோசடிகள் வெளிவரும் என்கிறார் திகாம்பரம்

(கொழும்பு)

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஊழல் மோசடி உட்பட பல்வேறு முறைகேடுகளில் சம்பந்தப்பட்டவர் எனவும் அவை தொடர்பான சகல தகவல்களையும் அடுத்த சில தினங்களில் வெளியிட உள்ளதாகவும் தேசிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் பலமுறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. அவை தொடர்பான சகல தகவல்களும் உள்ளன. ஆவணங்களுடன் இதனை ஒப்புவிக்க முடியும் எனவும் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஏற்கனவே மாவட்ட செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். சாட்சியங்கள் இருந்தால் குற்றச்சாட்டுகளுக்கு பதில் பெற்றுத் தரப்படும் என மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளதாகவும் எவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை வழங்குமாறும் அது குறித்து தாம் விசாரணை நடத்த தயாராக இருப்பதாகவும் மாவட்டச் செயலாளர் கூறியதாக திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

(அ-7)

# 634 சார்ஜன்களுக்கு பதவி உயர்வு வழங்கவேண்டும்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் சார்ஜன்கள் 634 பேருக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவியுயர்த்துமாறு வழங்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்த முடியாதெனத் தெரிவித்து பொலிஸ்மா அதிபர் தாக்கல் செய்த நகர்த்தல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

குறித்த பதவியுயர்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று 634 பொலிஸ் சார்ஜன்களுக்கு உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவி வழங்கப்பட வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் இதன்போது உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்க மற்றும் கே.ஸ்ரீபவன், ஜீ.ஏ.ரத்நாயக்க ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்றைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவை செல்லுபடியற்றதாக்கும் விதத்தில் நகர்த்தல் மனுக்களை தாக்கல் செய்ய முடியாதென பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

அவ்வாறான நகர்த்தல் மனுக்களுக்கு அமைய செயற்பட்டால் உயர்நீதிமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கை இல்லாமல் போகுமெனவும் நீதிமன்றத்தினால் மக்கள் மாத்திரமன்றி நம்பிக்கையும் பாதுகாக்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-7)

# இலங்கைப்படகுப் பயணிகள் 23 பேருக்கு புகலிடம் வழங்க அவுஸ்.அரசு இணக்கம்

23 இலங்கைப் படகுப் பயணிகளுக்கு புகலிடம் வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது. 2009 ம் புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணம் செய்த இலங்கை அகதிகள் இந்தோனேஷியாவில் தடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் படகில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்திருந்தனர்.

அப்போதைய பிரதமர் கெவின் ரொட்டின் வேண்டுகோளுக்கு இணங்க சிலருக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் புகலிடம் வழங்கி வருகின்றது. படகுப் பயணிகளில் நூற்றுக்கணக்கானவர்களுக்கு இன்னமும் புகலிடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் வருடமொன்றுக்கு 13 ஆயிரத்து 50 பேருக்கு புகலிடம் வழங்கப்படுகின்றது. படகு மூலம் புகலிடம் கோருவோருக்கு அதிகளவான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)





# அம்புலி மாமா கதைகள்

## புதியதொரு சமுதாயம் படைப்போம்

தனது தலையில் பல வண்ண மலர்களை சூட்டிக் கொண்டு மஞ் சுளா அழகு பார்த்தாள்.சற்று நேரம் தனது அழகை ரசித்த பின் பூக்கோலம் போட ஆரம்பித்தாள். வண்ண மலர்களைக் கொண்ட கோலம் போடும் கலையை அந்த கிரா மத்திற்கு அறிமுகப்படுத்தியதே அவள்தான்.

அதற்குத் தேவையான மலர்கள் அனைத்தும் அவளுடைய அழகிய தோட்டத்தில் உருவானவைதான்! அந்தக் கிராமத்தில் முதன்முதலாக பூக்கோல போட்டி நடக்கவி ருந்



தது. கர்நாடக மாநிலத்தின் மேற்கு கடற்கரையோரமாக இருந்த நாகின் கோப்பா என்ற விழாவின் பூக்கோலப் போட்டியில் பங்கு பெற்று இருந்த மஞ்சுளா மிகுந்த ஆர்வத்துடன் கோலமிடத் தொடங் கினாள்.

மலர்கள் என்றால் எப்போ துமே மஞ்சுளாவிற்கு மிகவும் பிடிக்கும். தன் தோட்டத்தில் பலவித வண்ண மலர்களை பயிரி ட்டு மகிழ்ந்த அவளுக்கு அந்த மலர்களை பயன்படுத்த நல்ல தொரு வாய்ப்பு கிட்டியிருந்தது.

தனக்கு மட்டுமின்றி தன் கிராமத்து மகளிரின் வாழ்க்கை யிலும் மறுமலர்ச்சியை உண்டா க்கிய பாக்குல் என்ற நகரத்து பெண்மணியை நன்றியுடன் நினைவு கூர்ந்த மஞ்சுளா மும் முரமாக கோலம் போட ஆரம்பி த்தாள். ஒருநாள் நண்பகல் நேரம் அந்த கிராமத்து மகளிர் வயலில் வேலை செய்து விட்டு மதிய உண விற்காக வீடு திரும்பியிருந்தனர்.

மஞ்சுளாவும் அவர்களுள் ஒருத்தி! அவர்களின் இருப்பி டங்களுக்கு அருகிலேயே ஒரு செக்கு இருந்தது. கிராமத்தினர் சிலர் அதில் வேலை செய்து வந் தனர். செக்கினுள் கரும்புகளை இட்டு சக்கையாகக் கசக்கி சாறு பிழிவது அவர்களுடைய அன் றாட வேலை! கரும்புச் சாற்றைக் கொதிக்க வைத்து வெல்லப்பாகு தயாரித்து பீப்பாய்களில் நிரப்பப் படும்.

நாகின் கோப்பா கிராமத்தில் பழைய நாட்டுக் கரும்புகள் மட் டுமே பயிரிடப்பட்டு வந்தன. அந்த நாட்டுக் கரும்புகளில் எடுக். கப்படும் சாற்றில் இருந்து கிடை க்கும் சர்க்கரை குறைவு என்பதால் பெரிய ஆலைகள் அவற்றை எடுத்துக் கொள்வதில்லை. ஒரு சமயம் நகரத்திலிருந்து ஒரு பெண் மணி நாட்டுக் கரும்புகளைத் தேடி நாகின் கோப்பா கிராமத்திற்கே வந்திருந்தாள்.

பெரிய அளவில் சர்க்கரையாகப் பயிரடப்படும் புதிய கரும்புகளை விட நாட்டுக் கரும்புகளே சுவை யாக இருப்பதாக கூறினார். அந்தப் பெண்மணி செக்கு ஆலையில் இருந்து சற்றுத் தொலைவில் இளைப் பாறிக் கொண்டிருந்த கிராமத்து பெண்களை அணுகினாள். தன் பெயர் பாக்குல் என்று அறிமுகப்ப டுத்தி கொண்டவர் அவர்களிடம் உரையாடத் தொடங்கினார்.

கிராமப்புறங்களில் பழங்காலத் தில் பயிரிடப்பட்டு வந்த பயிர்க ளின் மேன்மைகளை விளங்கியவர். தற்போது அதிக உற்பத்தியை கருத்தில் கொண்டு இரசாயன உரங்கள் போட்டு வளர்க்கப்படும் நவீன பயிர்களின் குறைபாடு களைப் பற்றியும் விளக்கினார். அவர் ஏற்கனவே ஒருமுறை அந்த கிராமத்திற்கு வந்திருப்பதாக கூறினார்.

தன்னுடைய முதல் சந்திப்பில் தனது பண்ணையில் பயிடப்படும் தாவரங்களைப் பற்றிய விபரங் களை அடுத்த முறை கொண்டு வரு வதாக சொல்லிவிட்டு சென்றிருந் தார். அன்று அவர் வந்திருந்தது இரண்டாம் முறை! கையில் ஒரு பையுடன் வந்திருந்தவர் அதனுள் ளிருந்த புகைப்படங்களை கூடி யிருந்த கிராமத்து பெண்களுக்குக் காட்டினார்.

அவர் காட்டிய படங்களில் பலவிதமான மூலிகைகள், கிழங்கு வகைகள், காய்கள், பழமரங்கள், மலர்கள் இடம்பெற்றிருந்தன. அதைப் பார்த்த பெண்கள் பரபரப் படைந்தனர்."ஐயோ! ஈஸ்வரா!"என்று அங்கலாய்த்த வயதான கங்கம்மா " இந்தக் குட்டிப் பாகற்காய்கள் இன்னும் கிடைக்கின்றனவா?" என்று கூறினாள்.

இலாபத்தை கருத்திற்கொண்ட பல விவசாயிகள் அந்த வகை குட்டிப் பாகற்காய்களைப் பயி ரிடுவதே இல்லை." இந்த குட்டி பாகற்காய்கள் இன்றும் கிடைக்கின் றன. ஆனால் கடைகளில் அல்ல! விரும்பினால் உங்கள் தோட்டத் தில் நீங்களே பயிரிட முடியும்" என்றார் பாக்குல்.

கிராமத்து பெண்களுக்குத் தெரி ந்த பல்வேறு சாதிப் பாகற்காய் களை பாக்குல் குறிப்பிடச் சொன் னார். தங்களுக்குள் வெகுநேரம் விவாதம் செய்து விட்டு அவர்கள் சில சாதிகளைக் குறிப்பிட்டனர். அவை எட்டு சாதிகள் மட்டுமே. "பாகற்காயிலேயே சாதிகள் எட்டு உள்ளன என்றால் ஏனைய காய்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை இன ங்கள் இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

இலாபத்தை மட்டுமே கருதும் வியாபாரிகள் அதிக மகசூலைக் கொடுக்கும் சில இனங்களை மட்டுமே பயிரிடச் சொல்லி வாங் குகின்றனர். அவர்களை நம்பியி ருக்காமல் உங்களுக்குத் தேவை யானவற்றை நீங்களே உங்கள் தோட்டத்தில் பயிர் இட்டால் எத் தனை நன்றாக இருக்கும்" என்ற பாக்குல் "உங்கள் தோட்டத்தில் விளையும் காய்கறிகளை சுவைத்து மகிழுங்கள். எஞ்சியவற்றை விற்று பணம் கூட சம்பாதிக்கலாம் என் றார்".

அவர் கூறியதைக் கேட்டு கிரா மத்து பெண்களிடையே உற்சாக மும் பரபரப்பும் ஏற்பட்டது. மஞ்சுளாவின் மனத்திலும் மாறுதல் ஏற்பட்டது. இயற்கை அளித்துள்ள பலவிதமான தாவரங்களையும் தன் வீட்டில் வளர்க்க வேண்டும் என்று எண்ணினாள்.

அவர்களுடைய உற்சாகத்தை கண்ட பாக்குல் " நீங்கள் ஒரு கூட்டுறவுச சங்கம் அமைத்துக் கொள்ளலாமே. ஒவ்வொருவரும் தங்கள் தோட்டத்தில் உருவாகும்



பயிர்களின் விதைகளை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ளலாம். இந்த முறையில் உங்களுக்கு ஒரே காயின் பல இனங்களின் விதைகள் கிடைக்கும்!" என்றார்.

அப்போது மஞ்சுளாவிற்கு ஓர் அபூர்வ யோசனை தோன்ற அவள் "அக்கா! இப்படிச் செய்யலாமே! விதைத்திருவிழா என்ற ஒன்றைக் கொண்டாடலாம்!எங்கள் கிராமம் மட்டுமன்றி அக்கம் பக்கத்திலு ள்ள கிராமங்களையும் பங்கேற்கச் செய்யலாம்! நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தோட்டத்து விதை களை பரிமாறிக் கொள்ள முன் வந்தால் ஒவ்வொருவருக்கும் அவர் களின் விருப்பத்திற்கேற்ப பல விதமான விதைகள் கிடைக்கும்.

அந்த விழாவின் போது விளை யாட்டு, பாட்டு, நடனம், பூக் கோலம் போன்ற கேளிக்கை நிகழ் ச்சிகளையும் ஏற்பாடு செய்ய லாம்!" என்றாள். பாக்குலின் கண் கள் வியப்பினால் விரிந்தன." ஆகா! என்ன பிரமாதமான யோசனை" என்று மஞ்சுளாவின் யோசனையை வரவேற்க கூடியிருந்த அனை வரும் உற்சாகத்துடன் வரவேற்றனர். வயதான கங்கம்மா கூட இள மங்கை போல் உற்சாகத்துடன் "என் னால் நூற்றுக்கணக்கான விதை களை கொண்டு வரமுடியும்"என்று கூவினாள்.

"அந்த விழாவிற்கு உங்கள் குழ ந்தைகளையும் கட்டாயம் அழை த்து வாருங்கள்.சிறு வயதிலேயே தோட்டம் வளர்க்கும் கலையில் அவர்களுக்கு ஆர்வமும் ஆழ்ந்த அறிவும் ஏற்படவேண்டும்" என்றார் பாக்குல். இவ்வாறு தொடங்கிய அந்த விழாவில் பல கிராமத்தினர் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

இளவயதில் தாங்கள் பார்த்து மகிழ்ந்து பின்னர் நினைவிலிரு ந்தே அகன்ற பல தாவரங்களின் விதைகளைக் காணும் வாய்ப்பு பல முதியவர்களுக்கு கிடைத்தது. மஞ்சுளா மிகுந்த ஆர்வத்துடன் தொடங்கிய பூக்கோலம் நிறைவு பெற்றது. நடுவர்களான பாக்குல் கங்கம்மா இருவரும் கோலப் போட் டியை பார்வையிட்டனர்.

இறுதியில் நடுவர்கள் தங்கள் தீர்ப்பை வழங்கும் நேரமும் வந்தது. " பூக்கோல போட்டியில் வெற்றி பெற்றவர்... மஞ்சுளா" என்று பாக்குல் அறிவித்ததும் கர கோஷம் விண்ணைப் பிளந்தது. மஞ்சுளா மகிழ்ச்சியில் திக்கு முக்காடி போனாள்.

மேடைக்குச் சென்று பரிசை வாங்கிக் கொண்டு திரும்பிய மஞ்சுளா மனதிற்குள் தன் ஆர் வத்திற்கு வடிகாலாக அமைந்த தனது தோட்டத்தையும் அதற்கு தூண்டு கோலாக இருந்த பாக் குலையும் வாழ்த்தினாள்.

### இலங்கைக்கு எதிரான பிரேரணை

# இராஜதந்திரிகள் கருத்தறியும் மாநாட்டை அமெ. நடத்தியது

## இந்தியா-மௌனம்; எகிப்து-எதிர்ப்பு; பிரான்ஸ்-ஆதரவு



இலங்கை தொடர்பிலான தனது பிரேரணையினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் அமெரிக்கா முன்வைத்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இது தொடர்பிலான உப மாநாடாடொன்றினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் அமெரிக்கா நடத்தியிருந்தது.

இந்த உப மாநாட்டில் 25 நாடுகள் பங்கெடுத்திருக்கின்றன. மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள் மற்றும் தமிழர் அமைப்பு பிரதிநிதிகள் என பலரும் பங்கெடுத்தனர்.

அமெரிக்காவின் இந்த உப மாநாடு குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதி தெரிவிக்கையில்,

இலங்கை உட்பட 25 நாடுகள் இதில் பங்கெடுத்திருந்தன. இலங்கை தரப்பில் மொஹான் பீரிஸ் கலந்து கொண்டிருந்தார். சபை யில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை குறித்த கருத்துககைள அமெரிக்கா கேட்டறிந்து கொண்டது.

அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக இந்த உப மாநாட்டில் பங்கெடுத்திருந்த நாடுகளில் நோர்வே, சுவிஸ், பிரான்ஸ், டென்மார்க், ஹங்கேரி, போலந்து, சுவீடன், அவுஸ்திரேலியா, பிரித்தானியா, ஒஸ்றியா, கனடா, போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் தங்களின் ஆதரவினை தெரிவித்திருந்தன.

பாகிஸ்தான் , ரஷ்யா, கியூபா, சீனா, எகிப்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், அல்ஜீரியா, இந்தோனேசியா, சிம்பாவே ஆகிய நாடுகள் எதிர்ப்பினை தெரிவித்திருந்தன.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் கனடா மற்றும் சிம்பாவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் அங்கத்துவம் இல்லாத நாடுகளாக உள்ளன.

குறிப்பாக அணிசேரா நாடுகளே அமெரிக்காவின் குறித்த பிரேரணைக்கு எதிர்ப்பினை காட்டியுள்ளமை உணரக்கூடியதாக இருந்தது.

இதில் குறிப்பாக இந்தியா எந்த வித கருத்தினையும் தெரிவிக்காது மௌனத்தை கடைப்பிடித்தது. மேலும் குறிப்பிட்ட சில நாடுகள் இவ்விவகாரத்தை இலங்கையே பார்த்துக் கொள்ளும் என கூறியிருந்தன.

அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள், இந்த பிரேரணையை கொண்டு வருவதற்கு பொருத்தமான தருணம் இதுவல்ல என தெரிவித்திருந்தனர்.

இதேவேளை இலங்கையில் பிரதிநிதி மொஹான் பீரிஸ் கருத்து தெரிவிக்கும் போது,

இறையாண்மைக்குள் தலையிடும் செயலாகவே இந்த பிரேரணை இருப்பதாககூறியதோடு இலங்கையே தனது உள்நாட்டு விவகாரத்தை கையாண்டு கொள்ளும் என தெரிவித்திருந்தார்.

உப மாநாட்டின் ஒட்டுமொத்த நிலையினையும் காணும் போது அமெரிக்கா தனது பிரேரணையில் உறுதியாக இருப்பதை உணரக்கூடியதாக இருந்ததோடு அடுத்து வரும் நாட்கள் இலங்கைக்கு நெருக்கடி மிகுந்ததாகவேஇருக்கும் என்பதனை இந்த உப மாநாடு உணர்த்தியுள்ளதாக தெரிவித்தார்.(அ-2)

## அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவை அவசர அழைப்பு இலக்கம்

அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவையை தொடர்புகொள்ள புதிய இலகுவான தொலைபேசி இலக்கம் 110 அறிமுகப்படுத்தப்பட்டது. அவசர அம்புலன்ஸ் சேவை தொடர்பாடல்களை ஒருங்கிணைக்க பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அவசர அழைப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.


இங்கு 24 மணிநேரமும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் பயிற்சியின் பின் பணிக்கமர்த்தப்பட்டனர்.எனினும் தொழில்நுட்பக்கோளாறுகள் காரணமாக சில வலையமைப்புக்களில் தொலைபேசி இலக்கம் 110 அழைக்கும்போது அநுராதபுரத்திற்கு அழைப்புச் செல்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவையை அழைப்பதற்கு தொலைபேசி இலக்கம் 110ஐ அழைக்கவும் அல்லது 0212225555 என்ற இலக்கத்துடனும் தொடர்புகொண்டு அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிராந்திய சேவை பணிமனை அறிவித்துள்ளது. (அ-6)

## மகிந்தவின் மீது நம்பிக்கை உள்ளதாக சீன அரசு தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மீது நம்பிக்கை இருப்பதாக சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என சீன கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்ட அமைச்சர் மியோவெய் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுச் சமாதானம் மற்றும் யுத்தத்தின் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கைகள் கிரமமான முறையில் நடைபெற்று வருகின்றன. இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நட்புறவு மிக நீண்டகாலத்திற்கு நீடிக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)



யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி வீதி சிரேஷ்ட சட்டத்தரணி கனக சபாபதி நமநாதன் யாழ்ப்பாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜா முன்னிலையில் சமாதான நீதவானாகவும் உத்தியோக பூர்வமற்ற மஜிஸ்ரேட்டாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் பிரபல சிவில் சட்டத்தரணியும் தேசிய நாளிதழ்களில் அரசியல், சட்ட, மனித உரிமை சமூகம் சார்ந்த கட்டுரைகளை எழுதி வருவதுடன் நினைவலைகள் என்னும் தொலைக்காட்சி நாடகத்தை இலங்கை ரூபவாஹினிக்காக எழுதி இயக்கியவர். இவர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் யாழ். கிளைத்தலைவரும் திருநெல்வேலி இந்து தமிழ்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளருமாவார்.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### விழிப்புணர்வும் பொறுப்புணர்வுமே இன்றைய தேவை!




இன்றைய உலகம் பெரு மாற்றத்தின் மூலமாக நகர்ந்து சென்றாலும் அம்மாற்றத்திற்குள் இருக்கும் மாயைகள் தான் என்ன என்று சிந்திக்கின்ற உண்மை புலப்படும். பணத்தை மையமாகக் கொண்டு கூறுபோடும் பிரிவினைகள் செய்யும் தொழிலை ஆதாரமாக வைத்து கொண்டு வேற்றுமை பாராட்டும் சாதிவெறி, கடவுளுக்கே காலம் வகுக்கும் மதங்களின் குழப்பம் நிறைந்த போதனைகள், நாகரிகம் என்ற போர்வையில் பெற்றவர்களையே விலைபேசும் நுகர்வுக்கலாசாரம், ஒழுக்கக்கேடுகள், போதைப்பொருட்களின் மிதமிஞ்சிய பாவனை, சுதந்திரம் என்ற பெயரில் தங்களையே அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் இளைஞர் யுவதிகளின் குறிக்கோளற்ற வாழ்க்கைமுறை, பெற்றோர், பெரியவர்களின் வார்த்தைக்கு மரியாதை தராத சிறுவர்கள், சினிமாவின் சீர்கேடுகள். இன்று மனிதர்களுடைய இயல்பு வாழ்வையே பாழாக்கும் சக்திகளாக தலைதூக்கியுள்ளன. இதிலிருந்து மக்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனின் அவர்களுக்கு தம் வாழ்வில் ஓர் விழிப்புணர்வு வேண்டும்.


**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

இன்றைய சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்பு முறைகள் மாறி புதுப்பொலிவடைய சட்டங்கள் இயற்றப்படுவது மட்டும் போதாது. ஏனெனில் இன்றைய நடைமுறையை நாம் கண்ணோக்கினால் குற்றவாளிகள் சட்டங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகளையே நாடி தங்கள் பலத்தால் சட்டத்தையே விலைக்கு வாங்கும் நிலையை நாம் காணலாம். எனவே நாடு, சமுதாயம், குடும்பங்கள் முன்னேற உண்மையான நீதி கிடைக்க ஒரே வழி விழிப்புணர்வு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

விழிப்புணர்வு நீதியை மட்டுமல்ல உண்மையையும் முழுச்சமூகத்திற்கும் தரும் என்பதில் ஐயமில்லை. மக்களிடையே விழிப்புணர்வு இருந்தால் அவர்களின் உரிமைகளை யாரும் விலைகொடுத்து வாங்கமுடியாது.

மக்களை மயக்கி அவர்கள் வாழ்வை எவரும் குட்டிச்சுவராக்க முடியாது. மனித சமுதாயத்தை பாழாக்கும் நீதியற்ற தலைவர்களின் ஆதிக்கம் நிலைக்க முடியாது. எனவே குடும்பங்களிலும் சமூகத்திலும் உண்மையான விழிப்புணர்வு எழ வேண்டும். மனிதர்கள் மத்தியில் அது காட்டுத் தீ போல பரவ வேண்டும்.

# போலவத்தையில் வாகன விபத்து; இருவர் பலி; இரண்டு பேர் காயம்



கொழும்பு- சிலாபம் பிரதான வீதியில் வென்னப்புவ வைக்கால் போலவத்தை பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் மேலும் இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கரவண்டி ஒன்று டிப்பர் ரக லொறியுடன் நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து காரணமாக முச்சக்கர வண்டியில் சென்ற நால்வரில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏனைய இருவருமே படுகாயங்களுக்குள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவ்விபத்தில் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான மேர்வின் சில்வா மற்றும் கட்டான பிரதேசத்தைச் சேர்ந்த ஜே.ஏ.திலுக் ஹர்ஷ ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# உரிமைக்கான பெண்கள் இயக்கத்தின் சர்வதேச மகளிர் தின ஆர்ப்பாட்டம்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி உரிமைக்கான பெண்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று முன்தினம் பகல் நடைபெற்றது.

பெண்களுக்குஎதிரானவன்முறைகளைக் கண்டித்தும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

*வடக்கில் இடம்பெயர்ந்த பெண்களின் உரிமையை பெற்றுக் கொடு, எரிபொருள் மற்றும் மின்கட்டணம் உயர்வு; பெண்கள் நாம் இருளில்* போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறும் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட உரிமைக்கான பெண்கள் இயக்கத்தின் செயலாளர் சரோஜா சாவித்திரிபோல்ராஜ்தெரிவிக்கையில்,

இந்த வருடம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி *பெண்பிள்ளைகளைப் பாதுகாப்போம்* என்ற தொனிப்பொருளில் அரசாங்கத்தினால் அறிக்கைவெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த நாட்டில் பெண்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் இல்லை. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் பெண்கள் உட்பட அனைத்துப் பெண்களின் பாதுகாப்பு, சுதந்திரம், வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் பெண்களுக்கான வாழ்வாதார வசதிகளற்ற நிலைமை காணப்படுகின்றது. இடம்பெயர்ந்த பெண்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படாதுள்ள நிலையில் அவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும்.

இந்த நிலையில் பெண்கள் நிம்மதியானதொரு வாழ்வை வாழ்வதற்கான எதிர்காலத்தை உருவாக்கித் தருமாறு சர்வதேச மகளிர் தினமான இன்றைய தினத்தில் நாம் வலியுறுத்தி நிற்கின்றோம் என்றார். (அ-2)

# ஐ.நா. கூட்டத்தொடர் குறித்து எவரும் கருத்துக்கூற வேண்டாம்

## ரணில் கட்சி உறுப்பினர்களிடம் கோரிக்கை

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் குறித்து தற்போது கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். இவ்விடயம் அரசாங்கத்தினால் கையாளப்பட வேண்டியதொன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 1987 ஆம் ஆண்டின் பின்னர் முதற் தடவையாக இலங்கை விடயம் எவ்வாறு கலந்துரையாடலுக்கு வந்தது என நேற்று நடைபெற்ற கூட்டமொன்றின் போது தனது கட்சி அங்கத்தவர்களுக்கு ரணில் விளக்கினார்.

அப்போதைய அரசாங்கம் அச்சவால்களை புத்திசாதுர்யமான அணுகுமுறை மூலம் எவ்வாறு வெற்றி கொண்டது என்பதையும் ரணில் விபரித்தார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் குறித்தும் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள 20 ஆவது கூட்டத்தொடரில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்தும் நாடாளுமன்ற விவாதமொன்றை கோரவும் ரணில் தீர்மானித்துள்ளார். (அ-2)

# 2012.03 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1535-பனாமாவின் ஆயரான ஃபிறே டொமாஸ் டெ பேர்லாங்கா என்பவரின் தலைமையில் வந்த கப்பல் பெருவுக்குச் செல்லும் வழியில் கலாபகசுத் தீவுகளில் தரையிறங்கியது.

★ 1629-இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான். அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் இயங்கவில்லை.

★ 1735-ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னனுக்கும் ஈரானின் நாதிர் ஷாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ரஷ்யப் படைகள் அசர்பைஜானின் பக்கூ நகரில் இருந்து வெளியேறின.

★ 1801-பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது..

★ 1804-லூசியானா அதிகாரபூர்வமாக பிரான்சிடம் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குக் கையளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

★ 1814-பிரான்சில் லாவோன் என்ற இடத்தில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

★ 1876-அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

★ 1893-ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.

★ 1902-போவர் போர்: தென்னா பிரிக்காவின் போவர்கள் பிரித்தானியப் படைகளுடனான கடைசிச் சமரில் வெற்றிபெற்றனர். 200 பிரித்தானியப் படைகள் கைப்பற்றப்பட்டன.

★ 1902-அசையும் படம்பிடி கருவியை தோமஸ் எடிசன் கண்டுபிடிக்கவில்லை என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

★ 1902-துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நிலநடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.

★ 1906-வடக்கு பிரான்சில் குரியேரெஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் ஆயிரத்து 99 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★ 1911-இலங்கையில் ஐந்தாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில் நாட்டின் மொத்தத் தொகை 4, 092,973 ஆகும். இதில் யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரத்து 441 பேர் பதிவாகினர்.

★ 1922- கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மாகாந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் இரண்டாண்டுகளில் சுகவீனம் காரணமாக விடுதலையானார்.

★ 1933-கலிபோர்னியாவின் லோங் கடற்கரையில் இடம்பெற்ற நிலநடுக்கம் காரணமாக 120 பேர் உயிரிழந்தனர்.

★ 1948-இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1952-கியூபாவில் ஃபுல்ஜென்சியோ பட்டீஸ்டா தலைமையில் புரட்சி வெற்றி பெற்றது.

★ 1959-திபெத்தில் பத்தாண்டு கால சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து லாசா நகரில் நடத்தப்பட்ட போராட்டம் தோல்வியில் முடிந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் சீன இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1970-வியட்நாம் போர்: அமெரிக்கத் தளபதி ஏர்னெஸ்ட் மெடினா வியட்நாமில் 1968 இல் நிகழ்த்திய மைலாய் படுகொலைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டான்.

★ 1977-யுரேனஸ் கோளைச் சுற்றி வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

★ 1982-கோள்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.

★ 1990-ஹெயிட்டியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் புரொஸ்பர் அவ்ரில் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1933-பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர் (இ.1995)


★ 1957-ஒசாமா பின்லேடன், இஸ்லாமியப் போராளி

### இறப்புக்கள்

★ 1966-ஃபிரிட்ஸ் சேர்னிக்கே, நோபல் பரிசு பெற்றவர் (பி.1888)

★ 2001-சி.ஜே.எலியேசர், பேராசிரியர் , பிரபல கணிதவியலாளர், தமிழ் அபிமானி (பி.1918)


★ 2006-சி.புஷ்பராஜா, ஈழத்தில் மாணவர் இளைஞர் பேரவைகளில் முக்கிய பங்காற்றிய போரா்ளி



★ 1933-தமிழ் நாட்டு அரசியல் வாதியும் தமிழ் ஆதரவாளருமான பழ.நெடுமாறன் பிறந்த தினம்.

# அதிசய உலகம்

## நாக்கால் ஓவியங்கள் வரையும் கலைஞன்




இந்தியாவின் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞர் ஒருவர் நாக்கால் சித்திரங்களை வரைந்து அசத்தி வருகின்றார்.

இவரின் பெயர் கே.அனி. சித்திர பாட ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். காலால் வரைகின்ற கலைஞர்கள் குறித்து அறிந்து ஆச்சரியப்பட்டார்.

இக்கலைஞர்களைப்போல வித்தியாசமான சாதனையை புரிதல் வேண்டும் என்று தீர்மானித்தார். முதலில் மூக்கால் ஓவியங்களை வரைய முயற்சித்தார். ஏற்கனவே பலரும் மூக்கால் ஓவியங்கள் வரைந்து இருக்கின்றனர் என்று அறிந்தபோது நாக்கால் ஓவியங்களை வரை கின்ற முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டு உள் ளார்.

இவரால் மிக அழகாக ஓவியங்களை நாக் கால் வரையமுடிகின்றது.

## 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட விலங்கின் கால்தடம்



30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு விலங்கின் கால் தடம் தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள ஆர்ஜென்டீனாவில் குவாமி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது. மேலும் கால் தடத்தை வைத்து பார்க்கும் போது அந்த மிருகம் 5 தொன் எடை கொண்டதாக இருக்கவேண்டும். மேலும் ஊர்வன வகையை சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.


## ஒரு நடமாடும் பொம்மை!



இந்த சிறுமியின் பெயர் டகோடா. வயது 16. வியட்நாமை சேர்ந்தவர். இவாது புகைப்பட ங்கள் ஆசிய மற்றும் அராபிய சமூக இணைப்புத் தளங் களை அதிரடியாக ஒரு கலக்குக் கலக்கி கொண்டு இருக் கின்றாள்.

இவர் தோற் றத் தில் பார்லி பொம்மைகளைப் போல அச் சொட் டாக இருக்கின்றமையே இதற்கு காரணம். இவருக் கும் உண்மையான பார்லி பொம் மைகளுக்கும் இடை யில் வித்தியாசம் காண்கின்றமை கல்லில் நார் உரிக்கி ன்றமை போல மிக கடினமான விட யம். இவருக் கும் பார்லி பொம்மைகளுக்கு இடையில் வித்தியா சம் காண்கின்ற முயற் சியில் ஈடுபட்டு பலரும் ஏமாந்து போய் உள்ளார்கள்.

## தண்ணீர் அடிக்கும் பசு மாடு




இயல்பு நிலையில் இருந்து வித்தியாசமாக எதுவும் நடக்கும் போது அது பார்ப்பவர்களுக்கு விந்தையாக இருக்கும். மனிதர்களுக்கு ஆறு அறிவு. மிருகங்களுக்கு ஐந்து அறிவு என்று சொல்வார்கள் மிருகங்களுக்கு சிந்திக்கும் திறன் இல்லை என்பது விஞ்ஞானிகள் கூற்று.

இங்கு ஒரு மாடு அதனை மறுதலிப்பதாக உள்ளது அதன் செயற்பாடு.தண்ணீர் தாகம் உள்ள பசுமாடு ஒன்று அடி பம்பில் தண்ணீரை அடித்து குடிக்கும் செயல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

படத்தில் பாருங்கள் நீங்களே புரிந்து கொள்வீர்கள். மிருகங்களுக்கு ஆறு அறிவா? இல்லை ஐந்து அறிவா என்பது? புரியும்.


## எஜமானிக்கு வேலை செய்யும் பெங்குயின்



பொதுவாக மனிதர்கள் எந்தவொரு பிராணிகளையும் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதில் வல்லமை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

அதற்கேற்ப பெங்குயின் ஒன்றை செல்லப்பிராணியாக வளர்க்கும் பெண்மணி ஒருவர் தனது கட்டளைக்கு இணங்க வேலை செய்வதற்காக பயிற்சிகளை வழங்கியுள்ளார்கள். இப் பெங்குயின் தான் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் எஜமானி சொல்லும் அனைத்து வேலைகளையும் சந்தோஷமாக செய்து அவரின் அபிமானத்தை வென்றுள்ளது.

## உலகிலேயே வேகமாக ஓடக்கூடிய றோபோ



உலகின் மிக வேகமாக ஓடக்கூடிய செயற்கை றோபோவாக Toboto Cheetah என்னும் றோபோவை தயாரித்து விஞ்ஞானிகள் புதிய சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

சீட்டா வகை புலியின் உருவம் கொண்ட தலையின்றிய குறித்த றோபோ29Km/h எனும் வேகத்தில் ஓடக்கூடியது. முன்னதாக 24Km/h எனும் வேகத்தில் ஓடக்கூடிய றோபோ உருவாக்கப் பட்டிருந்ததே சாதனையாக இருந்தது.

அமெரிக்காவின் பாதுகாப்பு உயர் ஆராய்ச்சி திட்ட முகவர் நிலையத்தினால் இந்த றோபோ உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனை விட மிக வேகமாக ஓடக்கூடிய தொழில்நுட்பம் இந்த றோபோவில் இணைக்கப்பட்டுள்ளதால் யுத்த களத்தில் மிக வேகமாக எதிரியை துரத்தி பிடிப்பதற்கும் தாக்குவதற்கும் என களத்தில் விட்டு பரிசோதிக்க போவதாக இதனை உருவாக்கியுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இழந்த கையை மீண்டும் பொருத்தி சாதனை

இன்றைய விஞ்ஞான உலகத்தில் நொடிக்கு ஒரு வளர்ச்சியை தொட்டு செல்கின்றது. மருத்துவத்துறையில் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்திருக்கிறது ஒரு சத்திரசிகிச்சை Southem Germanyயை சேர்ந்தவர்Karl Merk இவர் ஒரு விவசாயி.

கடந்த 2002 ஆம் ஆண்டு இடம் பெற்ற விபத்து ஒன்றின் போது அவர் தனது இரு கைகளையும் இழந்துள்ளார். சிகிச்சையின் பலனின்றி கைவிடப்பட்ட இவரது கைகள் பல ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இணைக்கும் முயற்சியில் இறங்கினர் வைத்தியர்கள்.

Karl Merk கைகள்ள பொருத்தும் முயற்சியில் இறங்கினர் மருத்துவ குழுவினர். இதில் வைத்தியர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட சுமார் 40 பேர் கொண்ட குழுவினர் மருத்துவ சிகிச்சைக்கு உதவினர். சுமார் 15 மணித்தியால கடும் போராட்டத்தின் மத்தியில் இரு கைகளும் வெற்றிகரமாக பொருத்தப்பட்டு விஞ்ஞான உலத்தில் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

# 2011 ஆம் ஆண்டில் 297.5 மில்லியன் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டன

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 451,899 மில்லியன் ரூபா பெறுமதியான 11,455 மில்லியன் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது அனுர குமார திஸாநாயக்க எம்.பி. கேட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், 2006 ஆம் ஆண்டு 44,799 மில்லியன் ரூபா பெறுமதியான 352.5 மில்லியன் நாணயத்தாள்களும் 2007 ஆம் ஆண்டு 650 மில்லியன் ரூபா பெறுமதியான 32.5 மில்லியன் நாணயத்தாள்களும் 2008 ஆம் ஆண்டு 101,300 மில்லியன் ரூபா பெறுமதியான 140.5 மில்லியன் நாணயத்தாள்களும் 2009 ஆம் ஆண்டு 83,350 மில்லியன் ரூபா பெறுமதியான 205 மில்லியன் நாணயத்தாள்களும் 2010 ஆம் ஆண்டு 104,650 மில்லியன் ரூபா பெறுமதியான 117.5 மில்லியன் நாணயத்தாள்களும் கடந்த வருடம் 117,150 மில்லியன்ரூபா பெறுமதியான 297.5 மில்லியன் நாணயத்தாள்களும் அச்சடிக்கப்பட்டுள்ளன என்றார்.

இதன்போது இடையிட்டு கேள்வி எழுப்பிய அனுர குமார திஸாநாயக்க எம்.பி நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 8 சதவீதமாக இருக்கும் நிலையில் நாணயத்தாள்களை அச்சடிக்கும் வேகம் 10 வீதத்திலும் அதிகமாக இருக்கிறது. அது பணவீக்கத்திற்கு வழிவகுக்காதா என்று வினவினார்.

இதற்கு பதிலளித்த சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நினைத்தபடி நாணயத்தாள்களை எந்தவொரு நாட்டிலேயும் அச்சடிக்க முடியாது. இங்கு அச்சடிக்கப்பட்ட நாணயத்தாள்களில் ஒருபகுதி பழைய நாணயத்தாள்களுக்கு பதிலீடாகவே அச்சடிக்கப்பட் டன. ஏனையவை நாட்டின் தேவைக்கேற்ப அச்சடிக்கப்பட்டன. இவற்றை மத்திய வங்கியே தீர்மானிக்கும் என்றார். (அ-2)

## பேருந்து மிதிபலகையில் பயணம் செய்தவர் பலி

பஸ்ஸின் மிதிபலகையில் பயணம் செய்த வயோதிபரொருவர் கால் சறுக்குண்டு கீழே விழுந்ததில் படுகாயத்துடன் கண்டி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பயனளிக்காததினால் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

ஜோர்ஜ் பெரேரா என்ற 56 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு இறந்தவராவார்.

ரிகிலகஸ் கடவிவிலிருந்து பதியபெலல்ல என்ற பிரதேசத்தை நோக்கி சென்ற பஸ் வண்டியில் மத்துரட்ட வில் ஷில எனும் இடத் திலே குறித்த வயோதிபர் மேற்படி சம்பவத் திற்கு ஆளாகியுள்ளார். (அ-7)

# பிரதி பொலிஸ்மா அதிபரை அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா மற்றும் புதிய பொலிஸ் அத்தியட்சகர் குகனேஸ்வரன் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினர்.

அமைச்சரின்யாழ். அலுவலகத்தில்இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், தனது பெயரையோ அல்லது தனது கட்சியின் பெயரையோ பயன் படுத்தி சட்டவிரோத செயல்களில் எவரேனும் ஈடுபடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்டப்படி உடனடிநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிப்புரை வழங்கினார். (அ-2)

# தேர்தலில் வாக்களிக்கவுள்ளோருக்கு விசேட போக்குவரத்து சேவைகள்

## முல்லை.அரச அதிபர் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபைகளுக்கான தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏதுவாக வவுனியா நிவாரணக் கிராமங்களில் உள்ள வாக்காளர்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்காக 39 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

குறித்த பிரதேச சபைகளுக்குரிய பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் சில்ர் இன்னமும் வவுனியா நிவாரண கிராமங்களில் தங்கியுள்ளனர். பொதுத் தேர்தலை போன்று கிராமங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகள் இந்த பிரதேச சபைத் தேர்தலுக்கு அமைக்கப்படமாட்டாது.

நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ளவர்களை அவர்கள் எந்த பிரதேச சபைக்குட்பட்டவர்களோ அந்த பிரதேச சபைக்குரிய வாக்குசாவடிக்கு சென்று வாக்களிக்கும் விதத்தில் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

அத்துடன் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டவருக்கு வாக்களிக்கும் போது ஆளடையாளத்தை உறுதிசெய்வதற்கானதேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

விசேடஅடையாளஅட்டையைபெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கிராம சேவகர்களூடாக பெற்று விண்ணப்பிக்குமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.(அ-7)

# மாதகல் கிழக்கு பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கிழக்கு பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

மாதகல் கிழக்கு கெவி லூர்து மாதா ஆலய வளாகத்தில் அப்பகுதி மக்களை நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வலி.தென் மேற்கு பகுதியான மாதகல் பகுதி மக்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு 1992 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தற்போதும் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.

மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு பல்வேறு அடிப்படைத் தேவைகள் இதுவரை உரிய வகையில் துறைசார்ந்த அரச திணைக்களத்தால் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

மக்களது கோரிக்கைகளை ஆராய்ந்தறிந்து அப்பகுதிக்கு உடனடியாக குடிநீரை வழங்கும் பொருட்டு குறிப்பிட்ட பகுதியின் சில இடங்களில் பிளாஸ்ரிக்கிலான தண்ணீர் கொள்கலன்களை வைத்து குடிநீர் வழங்குமாறும் இதுவரை இறைக்கப்படாதுள்ள கிணறுகளை இறைப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் தற்காலிக மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் தற்காலிக வீடுகளை அமைக்கும் பொருட்டு காணிகளை இனங்கண்டு அவற்றை துப்புரவு செய்வதற்கும் உரிய ஏற்பாடுகளை செய்துள்ளார். அத்தோடு யாழ். மணியந்தோட்டம் மற்றும் உதயபுரம் பகுதிகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் மக்களது கோரிக்கைக்கு விரைவில் துறைசார்ந்த அதிகாரிகள் ஊடாக தீர்வு காணப்படுமெனவும் பாராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார். (அ-7)

# ஓடித்திரிகிறது அரசாங்கம் எல்லோருடனும் பேச்சுவார்த்தை


(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைப் பேரவை அமர்வுகளில் கந்து கொண்டுள்ள நட்பு நாடுகளுடன் இலங்கை பிரதிநிதிகள் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புகள் குறித்து உறுப்பு நாடுகளுக்கு விளக்கமளிக்கப்பட உள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை முறியடிப்பதற்காக உறுப்பு நாடுகளுடன் இலங்கை பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்ற முயற்சிக்கப்படும் தீர்மானம் நல்லிணக்க முனைப்புகளை பாதிக்கும்என உறுப்புநாடுகளுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் இந்த உத்தியோக பற்றற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன. (அ-7)



யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் இருந்து கடந்த புதன் கிழமை கந்தம்பேயில் நடைபெற்ற தேசிய படையணியின் பயிற்சியில் கலந்துகொள்ள சென்ற மாணவர்களுக்கு யாழ். மாநகர சபை உறுப்பினர் விஜயகாந் காலணிப்பொதிகளை வழங்குவதை படத்தில் காணலாம்.

# கேள்வி கேட்டார் ரவி எம்.பி.; மௌனம் காத்தார் பிரதமர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகார பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி எழுப்பிய கேள்விக்கு அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குமரன் பத்மநாதன் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவர் தற்போது அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் அரசாங்க செலவில் ஹெலிகொப்டர் மூலம் பயணம் செய்து வருவதாகவும் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியிருந்தார். இக் குற்றச்சாட்டுக்கு ஆளும் கட்சியினர் பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு புறம்பான வகையில் எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்புவதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# இந்தியா யார் பக்கம்...?


ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை தோற்கடிக்க வேண்டும் என்பதில் இலங்கையும் உறுதியாக உள்ளது.

இந்த இரு வேறுபட்ட முரண்பட்ட சூழலுக்குள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள்கூட இரு அணிகளாகி நிற்கின்றன. சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஏற்கனவே இலங்கைக்கு ஆதரவு வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இன்னும் பலநாடுகள் அதரவு தெரிவித்துள்ளதாக அரசாங்கம் கூறினாலும் வாக்கெடுப்பு வரும், போதுதான் எந்தப்பக்கம் வெற்றி பெறப்போகிறது என்பது தெரிய வரும். யார் யார் எந்த அணியில் நிற்கிறார்கள் என்பதும் உறுதியாகும்.

இந்தத் தீர்மானம் விடயத்தில் அயல்நாடும் இந்து சமுத்திரத்தின் வல்லரசுமான இந்தியாவின் நிலை என்ன என்ற கேள்வி இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்றும் ஆதரிக்காது என்றும் நடுநிலை



வகிக்கலாம் என்றும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்தியா அதிகார பூர்வமாக எந்த முடிவையும் அறிவிக்காமல்- பூடகமாகப்பேசி வருவதுதான் இந்தக் குழப்பத்துக்கு முக்கியகாரணம்.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படும்போது, இதுபற்றி முடிவு செய்யலாம் என்று முன்னர் ஒருமுறை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியிருந்தார். இப்போது இந்தளவில் கூட இந்தியா எதனையும் கூறவில்லை.

இந்தத் தீர்மானத்திற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு அமெரிக்காவும் முயற்சிகளை மேற்கொண்டது. இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் அமெரிக்காவின் பொதுமக்கள் பதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான சார்நிலைச் செயலர் மரியா ஒட்டேரோ, இந்தியாவின் வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாயை சந்தித்துப் பேசிவிட்டே கொழும்புக்குப் புறப்பட்டார். இதனால், இந்தியாவும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் என்று முன்னர் தகவல்கள் வெளியாகின.

அதற்குள் இலங்கை அரசும் தன் பங்கிற்கு புதுடில்லிக்கு தூது அனுப்பியது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த விவகாரம் குறித்து இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் தொலைபேசியில் கலந்துரையாடியதாக தகவல்கள் வெளியாகின.

எனினும் இந்தியா எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. இலங்கைக்கு அத்தகைய வாக்குறுதிகளை கொடுக்கவும் இல்லை என்றே தெரிகிறது. ஆனாலும், மனித உரிமைகள் விவகாரத்தை கவனிக்கும் அமைச்சர் மகிந்த சமரசிங்க, தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களிக்கும் என்று கூறியிருந்தார்.

அது அவரது நம்பிக்கையா அல்லது இந்தியா கொடுத்துள்ள வாக்குறுதியா-என்பதை உறுதி செய்ய முடியவில்லை. இந்தத் தீர்மானம் இலங்கைக்கு மட்டும் சிக்கலைக் கொடுக்கவில்லை. இந்தியாவையும் கூடத்தான் தடுமாற வைத்துவிட்டது.

இலங்கைக்கு ஆதரவு கொடுப்பதா- இல்லையா என்பதே அதற்குள்ள முக்கியமான பிரச்சினை. தமிழர்களுக்கெதிரான போர் நடந்து கொண்டிருந்தபோது, போரை நிறுத்துமாறும் தமிழர்களைப் பாதுகாக்கும் படியும் தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் போராட்டங்களை நடத்தின. கடுமையான அழுத்தங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டபோதும் இந்தியா மசியவேயில்லை.

போரை நிறுத்துவதில் அது ஆர்வம் காட்டவேயில்லை. இலங்கை அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்து, அதன் விளைவாக போர் முடிவுக்கு வந்தது.

இந்தப் போரில் ஏற்பட்ட அழிவுகளும் அதன் தொடர்ச்சியும் தான் இப்போது அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்துக்கான மூல காரணம். அப்போது போருக்கு ஆதரவாக- இலங்கைக்கு துணையாக நின்ற இந்தியாவினால்,இப்போது அதே போன்று நிற்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் இந்தியா எதிர் கொண்டதைப் போன்றில்லாமல், இப்போது கடுமையான அழுத்தங்களைச் சந்திக்கிறது மத்திய அரசு. தமிழ் நாட்டில் உள்ளகட்சிகள் அனைத்தும் இந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்.என்று ஒற்றைக்காலில் நிற்கின்றன. தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

கருணாநிதி அறிக்கையோடு நிற்காமல், ரி.ஆர். பாலுவை அனுப்பி மன்

மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி இதுபற்றி தாம் பிரதமருடன் பேசியுள்ளதாகவும் தீர்மானத்தை இந்தியா கண்டிப்பாக ஆதரிக்கும் என்றே நம்புவதாகவும் கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல் தமிழர்களை இந்தியா காப்பாற்றும் கைவிடாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மத்திய அமைச்சர் ஜி.கே. வாசனும் இதுவிடயமாக மன்மோகன்சிங்குடன் பேசியுள்ளார். அவரும் தீர்மானத்தை அதரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். குமரி அனந்தனும் தீர்மானத்தை அதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு இத்தாலிக்கு சென்றிருந்தபோது முசோலினி அவரை சந்திக்க விரும்பினார். ஆனால், ஹிட்லருக்கு துணைபோன அவரை சந்திக்க நேரு மறுத்துவிட்ட உதாரணத்தையும் குமரி அனந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இந்த விவகாரம் புயலைக்கிளப்பி விட்டுள்ளது.

இத்தகைய சூழல் 2009 இல் இருக்கவில்லை. - அப்போது தமிழ் நாட்டிலுள்ள கட்சிகள் எல்லாம் போரை நிறுத்துவதற்கு ஆதரவாக குரல் கொடுத்தபோதும் காங்கிரஸ் மட்டும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

மத்தியில் காங்கிரஸ் கட்சி போருக்கு ஆதரவு வழங்கவும் தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி மௌனமாக இருக்கவும் விடுதலைப்புலிகள் மீதான வெறுப்புத் தான் முக்கிய காரணம்.

ராஜீவ்காந்தியைக் கொன்றவர்களை-பிரபாகரனை எப்படியாவது பழிதீர்த்து அழித்துவிட வேண்டும் என்பதில் காங்கிரஸ் உறுதியாக இருந்தது. இப்போது அவர்களின் அந்தக்கனவு ஈடேறிவிட்டது.

ஆனால், காங்கிரஸ் கட்சி தமிழரின் அழிவுகளுக்கு துணைபோனது என்ற கருத்து தமிழ்நாட்டில் வலுவாகவே உள்ளது. தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் இதை உணரவும் முடிந்தது. இதனால்கூட இப்போது காங்கிரஸ் தலைவர்கள் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கலாம்.

தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கோரியிருப்பதும் அழுத்தம் கொடுப்பதும் மத்திய அரசுக்கு பிடிக்காமல்



நாடுகளுக்கெதிராக கொண்டு வரப்படும் தீர்மானங்கள், ஆக்க பூர்வமான கலந்துரையாடல்களைப் பலவீனப்படுத்தும் என்று கூறியிருந்தார்.

சிரியாவுக்கு எதிரான கண்டனத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பிலும் இந்தியா நடுநிலை வகித்தது. நினைவிருக்கலாம். மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வெளியிட்ட கருத்து இலங்கைக்கு சாதகமாக இருக்கும் என்றே கருதப்பட்டது.

ஆனால், அதற்கிடையில் மத்திய அரசுக்கான நெருக்கடிகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இந்தக் கட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் பேசி, பொருத்தமான முடிவை எடுப்பதாக கூறியுள்ளதாகவும் தகவல்.

இந்தியா இந்த விடயத்தில் குழப்பத்துக்குள்ளாகியுள்ளது என்பதை உணர முடிகிறது. இப்போது இந்தியா எந்த முடிவை எடுத்தாலும் அதற்கு சிக்கல்கள் வரவே செய்யும்.

இலங்கையைக் கைவிட்டால் தற்போதைய வெளிவிவகாரக் கொள்கையில் இருந்து தடம்புரண்டதாகிவிடும். இன்னொரு பக்கத்தில் சீனா இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கையுடன் இன்னும் நெருக்கமாகிவிடுமோ என்ற பயமும் அதிகரிக்கும்.

இலங்கைக்கு, முண்டு கொடுத்தால், தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவில்லை என்று இரண்டாவது தடவையும் பழிச்சொல் ஏற்கவேண்டியிருக்கும். விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்ளப்போகின்ற நிலையில்

## அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான தீர்மானம்

மோகன்சிங்கை சந்திக்கவைத்து அழுத்தம் கொடுத்துள்ளார். தீர்மானத்தை ஆதரிப்பதைவிட வேறு எந்த சமரசத்தையும் ஏற்கமுடியாது என்று தி.மு.க. கூறியுள்ளது.

இடதுசாரிகட்சிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் பேரணிகள், போராட்ங்கள், உண்ணா விரதங்கள் என்று அறிவித்துள்ளன. இவையெல்லாம் ஏற்கனவே நடந்ததுதான். இப்போது கொஞ்சம் வித்தியாசம்.

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர்களும்கூட இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவில் உள்ளதுதான் அது. இதுதான் ஆச்சரியமானது. அதே வேளை இந்திய அரசு அழுத்தமாகவும் உள்ளது.

பிரதமர் அலுவலகத்துக்கான

போகலாம். ஆனால், அவர்களால் இந்த அழுத்தங்களை இலகுவில் உதறிவிட முடியாது.

தமிழக முதல்வர், ஏனைய கட்சிகள் மட்டுமன்றி, தமது கட்சித் தலைவர்கள் சொல்வதையும் புறக்கணித்து ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவு கொடுப்பது இந்திய அரசுக்கு சவால்தான்.

இப்போது இந்தியா தனது வெளிவிவகாரக்கொள்கையை சார்ந்து முடிவு எடுக்கப் போகிறதா அல்லது மத்திய அரசின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் அடிப்படையில் முடிவை எடுக்கப்போகிறதா என்ற கேள்வி எழுகிறது.

மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய இந்தியப்பிரதிநிதி,

காங்கிரசுக்கு அது பலமான நெருக்கடியாக அமையும்.

அதைவிட இப்போது இலங்கையைக் கைவிட்டால் விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற பழியுணர்ச்சியால்தான் இந்தியா முன்னர் போருக்கு ஆதரவு கொடுத்தது என்பதும் உறுதியாகும். இப்படியாக இந்தத் தீர்மானம் இந்தியாவை பல தொடர்ச்சியான நெருக்கடிகளுக்குள் தள்ளிவிட்டுள்ளது.

**நன்றி: கே.சஞ்சயன்**

எந்த முடிவை எடுத்து காங்கிரஸ் காய்களை நகர்த்தினாலும், இலங்கையை விடவும் இந்தியாவுக்கே அதிகம் தலைவலியைக் கொடுக்கும் போலுள்ளது.

# அப்பாவி மக்களின் அவலத்தில் அரசியல் ஆதாயம் தேடும் அற்பத்தனம் வேண்டாம்!

## அலென்ரின் எம்.பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாதக சம்பவங்களை சமூகப் பொறுப்புடன் அணுகி இதன் பரிமாணங்களை பகுத்தாராய்ந்து பரிகாரம் காண உதவ வேண்டிய நிலையில் ஒருசில ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் அரசியல் சாயம் பூசி ஆதாயம் தேட முயல்வது ஆரோக்கியமானதல்ல என குறிப்பிட்டு ஈ.பி.டி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நெடுந்தீவில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை சம்பவம் குறித்தும் சில ஊடகங்களில் வெளியான செய்திகளில் தவறான உள்ளடக்கத்திற்கு பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நெடுந்தீவை சேர்ந்த பதின்மூன்று வயது நிரம்பிய பாலகி•ஜேசுதாசன் லக்சினி ஒரு காட்டு மிராண்டிக் காமுகனால் கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை படுகொலை செய்யப்பட்ட பாதகம் எமது நெஞ்சை பதற வைத்துள்ளது. இந்தப் படுகொலை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதையும் காவல் துறையினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதையும் நாம் வரவேற்பதுடன் இந்தப் பாதகத்தின் பங்காளிகள் அனைவரும் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமெனவும் எமது மக்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பகிரங்கமாக கோருகின்றோம்.

நாட்டில் பால்ய வயதினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் எமது பகுதியில் அதற்கு இடமளிக்காமல் தடுத்து நிறுத்த சமூகப் பொறுப்புள்ள அனை வரும் முன்வர வேண்டும்.

இந்நிலையில் இவ்வாறான பாதகச் சம்பவங்களை சமூகப் பொறுப்புடன் அணுகி இதன் பரிமாணங்களை பகுத்தாய்ந்து பரி காரம் காண உதவ வேண்டிய நிலையில் ஒரு சில ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் இந்தச் சம்பவத்திற்கு அரசியல் சாயம் பூசி ஆதாயம் தேட முயல்வது ஆரோக்கியமான தல்ல. இந்தச் சம்பவத்துடன் தொடர்பான சந்தேக நபரை எமது கட்சியுடன் தொடர்புபடுத்தி அவதூறுகளை கிளப்பியுள்ள ஒருசில ஊடக ங்கள் பாரிய சமூகப் பிரச்சினையாக நிகழத் தொடங்கக்கூடிய இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் எவரும் கரிசனை கொண்டு அவற்றின் மூலங்களை கண்டறிந்து அவற்றை களைய முயல்வதை தடுக்க முயல் வதாகவே கருத இடமுண்டு.

ஆரம்ப காலந்தொட்டு எமது தொடரும் அரசியல் வேலைத்திட்டங்களின் ஊடாக இப்பகுதி மக்களுடனான எமது கட்சியின் நெருக்கம் ஒன்றரக் கலந்ததாகவே இருந்து வருகிறது. எனவே, இப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் தினசரி எம்மிடம் வந்து போகின்றவர்களாகவும்தொடர்ந்தும் எம்முடன் தொடர்பிலுள்ளவர்களாகவும் இருந்து வருகின்றனர். இந்நிலையில் இவர்கள் அனைவரும் எமது கட்சி உறுப்பினர்கள் எனச் சொல்வது அரசியல் உள்நோக்கமுள்ள அவதூறின்றி வெறேதுமில்லை.

இந்நபர் ஆரம்ப காலத்தில் தனது வாழ்வாதாரத்திற்காக எமது கட்சியின் உதவிகளை பெற்று வந்தவர். தீவுப் பகுதியிலுள்ள இதர மக்களை போல தனது தினசரி தேவைகள் நிமிர்த்தம் இவர் எமது அலுவலகத்திற்கு வந்து போயிருப்பாரே ஒழிய எமக்கும் இவருக்கும் எந்தவித இதர தொடர்புகளும் இருந்ததில்லை.

இந்த நிலையில் இந்நபர் எமது கட்சியின் உறுப்பினர் என சில ஊடகங்கள் கற்பிதம் செய்து செய்திகள் வெளியிடுவது அற்பத்தனமான அரசியல் நோக்கமுள்ளதாகும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-2)

# தேசிய கொள்கைகளை மீறும் வகையில் பஸ் கட்டணம் அதிகரிப்பு

## அனுரகுமார எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதுடன் பஸ் கட்டணம் தொடர்பான தேசியக் கொள்கையை மீறும் வகையில் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

.எரிபொருள் விலையேற்றத்தை முன்னிலைப்படுத்தி கட்டணங்கள் 15.8 வீதத்தால் மாத்திரமே அதிகரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் 20 வீதத்தால் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி இதற்கமைய மீண்டுமொருமுறை பஸ் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பஸ் கட்டணம் தெடர்பான தேசிய கொள்கைக்கு அமைய மீண்டுமொரு முறை ஜுன் மாதத்தில் கட்டண திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதென போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மேலும் குறைந்தளவான பஸ் கட்டணமாக 8 ரூபா 25 சதம் அறவிடப்பட வேண்டுமெனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ-7)

# அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் முரண்பாடு இல்லை-விஜிதஹேரத்



(கொழும்பு)

அமெரிக்காவிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடு கிடையாது என ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விதிதஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் அமெரிக்காவும் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதாலேயே அரசாங்கப் பிரதிநிதிகளும் அமெரிக்கப் பிரதிநிதிகளும் ஜெனீவாவில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே அமெரிக்காவும் இலங்கை அரசாங்கமும் கூட்டாக இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைய மக்கள் தோற்கடிக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# கருச்சிதைவை சட்டபூர்வமானதாக்கும் வகையில் சட்டத்திருத்தம்-கரலியத்த

(கொழும்பு)

வல்லுறவுக்கு ஆளாகியவர்களுக்கு கருச்சிதைவை சட்டபூர்வமானதாக்கும் வகையில் சட்டத்தை திருத்துவது பற்றிய நிபுணர்களின் கருத்துக்களை வரவேற்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சரான திஸ்ஸ கரலியத்த நேற்று கூறினார்.

நீதிமன்ற முறைமை மற்றும் வைத்திய நிபுணர்களை இவ்விடயத்தில் தமது ஆதரவை வழங்க வேண்டுமென அமைச்சர் கரலியத்த கேட்டுள்ளார். சமயக்குழுக்கள் இதனை எதிர்க்ககூடுமாயினும் வல்லுறவு காரணமாக கர்ப்பமுற்றவர்களின் நலனை கருத்திற் கொண்டு இந்த விடயம் கருத்தாடல் செய்யப்பட வேண்டுமென அவர் கூறினார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் தகவல்படி இலங்கையில் கருச்சிதைவு செய்யும் பெண்களில் 90 சதவீதமானோர் திருமணமானவர்களாக உள்ளனர். தமக்கு ஏற்கனவே குழந்தைகள் போதுமென எண்ணுவோரும் தம் கடைசிப் பிள்ளை நிறைகுறைவாக உள்ளது எனக் கருதுவோரும் கருச்சிதைவு செய்து கொள்ள தீர்மானிக்கவுள்ளனர்.

போதிய வருவாய் இன்மையும் உழைப்புக்காக வெளிநாடு செல்வதும் 20 சதவீதமான கருச்சிதைவுக்கு காரணமாக உள்ளது. 4-7 சதவீதமான கருச்சிதைவுக்கு காரணமாக விவாகரத்துள்ளது.

குறைந்தபட்சம் நாளொன்றுக்கு மூன்று சிறார்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றனர். 2011 ஆம் ஆண்டில் ஆயிரத்து 636 சிறார்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

அமைச்சின் அறிக்கையின்படி அநுராதபுரம், பொலனறுவை மற்றும் இரத்தினபுரி பகுதிகளில் கூடுதலான வல்லுறவுகள் இடம் பெற்றுள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் 87 சதவீதமானோர் வயது குறைந்த பெண் பிள்ளைகள் ஆவர். (அ-2)


# ௯ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1939 | | 2003 |
| 01 | | 02 |
| 30 | | 19 |



## அமரர் கார்த்திகேசு சந்திரராசா

(முன்னாள் பிரதேச செயலாளர் சங்கானை)

திதி:-2012.03.10

ஒரொன்பதாண்டுகள் ஓடியே சென்றும் அப்பா
நீரெம்மை விட்டகன்ற நீள் துயரம் தீராதாம்
ஆரெவரும் இல்லையப்பா ஆதரவாய் எமையணைக்க
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே பர்த்தாவே-உங்கள்
கார்மேக வண்ணன் கழலடியில்- உம்
ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(7651)

# வடபகுதி வேளாண்மையும் அது சார்ந்த முதலீடுகளும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

18- VI

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வேளாண்மையில் அபிவிருத்தியின் சில்லுகளை இழுத்தசைக்கும் இக்காலங்களில் அதனுள் முதலீடு செய்வதற்கு பலரும் விரும்பி வழிகள் பலவற்றை தினந்தினம் தேடிக்கொண்டிருப்பதனை அறியும் போது இலங்கை மத்திய வங்கியினது வடமாகாண காரியாலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கான ஒன்று கூடலும் ஊக்குவிப்பும் காயத்தே மேற்கொண்ட சிறந்த கைங்கரியமாக கொள்ளலாம்.

இன்னும் எம்மினிய புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் மீண்டும் தாய் மண்ணிற்கு வந்து தொழில் செய்ய நினைப்பதுவும் இங்குள்ள உறவுகளுக்கான வேலை வாய்ப்பு, வாழ்வாதார விருத்தி என பலவற்றை சிந்தனையில் கொண்டுள்ளமையும் வரவேற்கத்தக்கது.

இருப்பினும் இதுவரை பலரும் எங்களுடன் கலந்துரையாடியதிலிருந்து ஒரு குறிப்பிட்ட முதலீடுகளுக்கு தமது விருப்பத்தை தெரிவிப்பது இங்குள்ள ஏனைய முதலீட்டு வசதிகளை அறிந்திராது இருப்பதால் என எண்ணத் தோன்றுகின்றது. ஆகையால் அவை பற்றி குறிப்பிட்டு இக்கட்டுரையை தொடரில் எடுத்தியம்பலாம் என எண்ணுகின்றேன்.

வட பகுதிக்குரிய வளங்களில் ஒன்று பனை வளம். பனையுடன் சேர்ந்து தென்னை, கமுகு, கித்துள், பேரீஞ்சு, எனப் பல பனைக்குடும்பத் தாவரங்களையும் கணக்குப் போடலாம்.

பனை, தென்னைக்கு கொடுத்த முக்கியத்துவம் கமுகுக்கு கொடுத்ததாக இல்லை. ஆனாலும் இதுவும் வருவாய் தரக்கூடியது.

பனை வளத்தினை முழுமையாக மதிப்பீடு செய்தால் இதில் திட்டமிட்டு முதலீடு செய்ய வாய்ப்புகள் அதிகம் உண்டு. பரந்து பட்ட அளவில் வளர்ந்திருக்கும் வடலிகளினை முதலீடாக மாற்றினால் நிறையவே வருவாயை பெருக்கிடவும் உலக சந்தைக்கு ஏற்றிடவும் வழி செய்யலாம்.

பனையிலிருந்து கிடைக்கும் அனைத்து பொருட்களையும் ஏதோ ஒரு தேவைக்கு பயன்படுத்த முடியும். இறுதியில் எரித்து விறகாகக்கூட பயன்படும் என்பதை நாம் அனைவரும் தெரிந்து வைத்தும் கூட இதனது அபிவிருத்திக்கு முதலீடு செய்ய முனையாதது அதிசயமாக இருக்கின்றது.

வருகின்ற வாய்ப்புகள் சுற்றுலாத் துறை சார்ந்து வருகின்றது. தென்பகுதி மக்கள், வெளிநாட்டவர்கள் எனப் பலரும் ஒன்று கூடும் இடமாக இருக்கும். கண்டு கழிப்பதற்கு என்ன இருக்கின்றது என நாம் தான் அலட்டிக் கொள்கின்றோமே தவிர இங்கு வருபவர்களுக்கு இதுவும் ரம்மியமான சூழல் தான்.

எங்களுக்குள் இருக்கும் அழகை, அந்த இயற்கையை இரசிக்க சுவைக்க தெரியாதவர்களுக்கு, அக்கரை பச்சையாகவே இருக்கும். எமது தாய் மண்ணை விட இன்னொரு இடம் சிறப்பாகுமா? எமது தாயை, தாய் மண்ணை, தாய் நாட்டை அழகு படுத்திப் பார்ப்பது தானே சிறப்பு.

எம்மை நோக்கி ஏனையவர்கள் திரும்பிப் பார்க்க வைத்தல் வேண்டும். ஜப்பானியர்களால் இது முடியும் என்றால் யாழ்ப்பாணத்தவர்களால் ஏன் முடியாது? வடபகுதி முழுவதுமாக சுற்றுலாத்துறை மையங்கள் அமையும் போது அது சார்ந்த வேலைவாய்ப்புகள் அதிகரிக்க வாய்ப்புகள் நிறைய உண்டு.

பனை வளத்தினை முழுவதுமாக பயன்படுத்தும் அனைத்துவகை தொழிற்றுறையும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இங்கே பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் செயற்பாட்டினை அவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்திக் கொடுத்து அவர்களுக்கூடாகவே முன்னேற்றும் வழிவகைகளை இனங்காண வேண்டும்.

கூட்டுறவின் சின்னமாக செயற்படும் இச் சங்கங்களின் மேன்மைக்கு இன்னும் வித்திடலாம். கல்வியறிவு, தொழில்நுட்ப அறிவு இன்னும் கணனியறிவு அனைத்தையும் பனை வளம்சார் வாழ்வாதாரத்தில் பின்னிப் பிணைந்திருக்கும். குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்திட எம்மினிய புலம் பெயர்ந்து வாழும் உறவுகளை விரும்பியழைக்கின்றோம்.

உங்கள் அனுபவத்தை இங்கே முதலீடு செய்யுங்கள். ஆதாயம் மட்டுமின்றி ஒரு சமூகமே முன்னேற்றமடைந்து எங்கள் பிரதேசத்து வளங்களை காத்திடுவர்.

பனை வளஞ்சார்ந்த புதிய தொழிற்றுறை உருவாக்கப்படல் வேண்டும். இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மீள புதுப்பிக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிலையம் இயங்க தொடங்கி தொழில்நுட்ப தேவைகளை உள்வாங்கிய ஆய்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

எந்த பொருளானாலும் தரமும் நியாயமான விலையும் நம்பிக்கையும் நிர்ணயஞ் செய்யப்படல் வேண்டும். பனை சார் கைப்பணிப் பொருட்களில் இன்னும் புரட்சி செய்தல் வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் முயற்சியினால் பலவகை பொருட்கள் உற்பத்தியாவது சிறப்புக்குரியது. இன்னும் தரத்தை அதிகரிக்க நவீன இயந்திரங்களின் உதவியும் தொழில்நுட்ப விருத்தியும் அவசியமாகும்.

சூழலுக்கியைவான பொருட்களாக இவை உற்பத்தி செய்யப்படும் போது அவற்றிற்கான கேள்வியும் அதிகரிக்கும்.

இந்த இடத்தில் தொழில்நுட்ப பயிற்சிகள், ஆய்வுகள் இன்னும் கல்வி சார் முயற்சிகள் அனைத்திற்கும் களமமைக்கும் தொழில்நுட்ப நிலையமொன்றின் தேவை எடுத்தியம்பப்பட்டுள்ளது.

இது விவசாய, தொழில்நுட்ப, இயந்திரவியல் இவற்றுடன் சுகாதாரம், மருத்துவம், சுதேச வைத்தியம், சூழலியல் ஆகிய துறைகளை உள்வாங்கியதாக இருத்தல் வேண்டும். வெறுமனே நிலையமாக இருத்தல் வேண்டும்.

வெறுமனே நிலையமாக இயங்காது பனை சார் தொழிற்றுறையை இயக்கும் நிலையமாக அமைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். இங்கும் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் நிறையவுண்டு.

எங்களூர் இளைய சமூகத்தை பயிற்றுவித்து பயிற்சி கொடுத்து பனை சார் தொழிற்றுறைக்குள் உள்ளீர்க்கும் வழிகள் பற்றி தொடர்ந்து பார்ப்போம். (வளரும்)

# தொல்பொருள் நிலையங்கள் சுயாதீனமாக இயங்கவேண்டும்

## அனுமதி கோருகின்றது கிழக்கு மாகாண சபை

(மட்டக்களப்பு)

தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கான நிலங்களை கையாள்வதில் மத்திய அரசாங்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண சபை கோரியுள்ளது.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் அதிகாரம் கோரும் சட்டமூலம் ஒன்றை கிழக்கு மாகாண சபை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளது என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

அகழ்வாராய்ச்சிக்கான இடங்களை கண்டறியவும் அவ்வாறான இடங்களை பாதுகாப்பதிலும் முக்கிய பாத்திரத்தை வகிக்க கிழக்கு மாகாணம் விரும்புகின்றது என கிழக்கு மாகாணத்துக்கான கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விமலவீர திசாநாயக்க கூறினார்.

மத்திய அரசாங்கம் இப்பகுதிகளில் மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்காணிக்கவும் கிழக்கு மாகாண சபை விரும்புகின்றது.

கடந்த 1940 இன் இலக்கம் 9 தொல்பொருள் நிலையில் கட்டளைச்சட்டம். இச் சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட 1998 இன் 24 ஆம் இலக்க திருத்தம் என்பவற்றின் படி மரபுச் சொத்து மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள தொல்பொருள் அகழ்வாராய்ச்சி திணைக்களத்தின் தனிப்பொறுப்பின் கீழ் வருவதாகும்.

13 ஆம் திருத்தத்தின் படி இந்த விடயம் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் உள்ளதால் கிழக்கு மாகாணசபை இது தொடர்பாக நாடாளுமன்றத்தின் அபிப்பிராயத்தை கோரியுள்ளது. (அ-2)

# 12 விடயங்களை அடிப்படையாகக் கொண்டே பஸ்கட்டணம் அதிகரிப்பு

## அமைச்சர் குமார வெல்கம

(கொழும்பு)

12 விடயங்களை அடிப்படையாக கொண்டே பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்பதனால் ஒரு வருடத்திற்கு பஸ் வேலை நிறுத்தம் இருக்காது என்பதுடன் ஜூலை மாதம் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையில் பஸ்கட்டணம் 15.8 வீதமே அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் 20 வீதம் கட்டண அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

12 விடயங்களை அடிப்படையாகக் கொண்டே பஸ் கட்டணங்ககள் அதிகரிக்கப்பட்டன.

பஸ் கட்டணங்களுடன் அதிகரிப்பு சம்பந்தமாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையிலேயே 20 சதவீத பஸ் அதிகரிப்புக் கொள்கையின் பிரகாரம் ஜூலை மாதம் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்க முடியாது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் செய்ய முடியாது.

ஒரு வருடத்திற்கு வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட முடியாது. இக் காலப் பகுதிக்குள் எவ்வாறாக விலை அதிகரிப்புக்கள் ஏற்பட்டாலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என்பதுடன் பொதுச் சேவையான போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (அ-7)

# ஹோலி பண்டிகைக்கு பயன்படுத்திய வண்ணப் பொடியில் இரசாயக் கலப்பு

## 200 பேர் வைத்தியசாலையில்....



(சென்னை)

மும்பையில் ஹோலி கொண்டாட்டத்தில் பயன்படுத்தப்பட்ட வண்ணப் பொடியில் இரசாயனம் கலந்திருந்ததால் வாந்தி, மயக்கம், உடல் அரிப்பு போன்ற காரணங்களினால் 200 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நாடு முழுவதும் ஹோலி பண்டிகை நேற்று முன்தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. மும்பை தாராவியிலும் காலை முதலே சிறியவர்களும் பெரியவர்களும் வண்ணப் பொடிகளைத் தூவியும் வண்ணத் திரவங்களையும் ஒருவர் மீது ஒருவர் பூசியும் கொண்டாடினர்.

கொண்டாட்டம் முடிந்த பின்னர் குளிக்கச் சென்ற சிறுவர்கள் உட்பட ஏராளமானோருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. சிலருக்கு கண்களில் எரிச்சலும் உடல் அரிப்பும் ஏற்பட்டது.

இதேவேளை, நூற்றுக்கணக்கானவர்கள் இதே பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர் களில் பெரும்பாலானோர் 5 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வாந்தி எடுத்து மயங்கி விழுந்த அவர்களை பெற்றோரும் உறவினர்களும் கதறியபடி அருகில் உள்ள மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு பாவிக்கப்பட்ட வண்ணப் பொடிகள், வண்ணத்திரவியங்களின் மாதிரிகளை பரிசோதனைக்காக ஆய்வு கூடத்துக்கு அனுப்பினர். இதுபற்றி தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (அ-2)

# அரசியலில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை இந்தியாவில் மிகக்குறைவு

(சென்னை)

உலகின் ஏனைய நாடுகளைவிட இந்தியாவில் பெண்கள் மிகக் குறைவான அளவிலேயே அரசியலில் ஈடுபடுகிறார்கள். நேற்று முன்தினம் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. ஆனால், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் நாடாளுமன்றத்தில் பெண்களின் பங்களிப்பு வெறும் 11 சதவீதம் தான். இதனால் அரசியலில் பெண்கள் ஈடுபடும் விடயத்தில் இந்தியா 105 ஆவது இடத்திலுள்ளது.

543 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் 60 பெண் உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இந்தப் பட்டியலில் அண்டை நாடுகளான பாகிஸ்தான் 52 ஆவது இடத்திலும் நேபாளம் 20 ஆவது இடத்திலும் வங்களாதேசம் 65 ஆவது இடத்திலும் சீனா 60 ஆவது இடத்திலும் இவற்றைவிட இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் 56 சதவீத பெண்கள் இடம்பெற்றுள்ள கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டா இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது. இலங்கை 129 ஆவது இடத்திலும் மியன்மார் 134 ஆவது இடத்திலும் உள்ளன. (அ-2)

# இந்தியா-அமெரிக்கா இடையிலான நட்புறவு முக்கியத்துவம் வாய்ந்தது

## நிருபமா ராவ் கருத்து



(வோஷிங்டன்)

இந்தியா- அமெரிக்கா இடையிலான உறவு இயற்கையாக ஏற்பட்ட ஒன்று. சமூக, பொருளாதார ரீதியில் மேம்பாடு காண இரு நாடுகளுக்கிடையிலான உறவு மிகவும் அவசியம் என்று அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

உத்தி ரீதியில் இந்தியா- அமெரிக்கா இடையிலான நட்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. பரஸ்பரம் வளர்ச்சியை எட்டுவதில் இரு நாடுகளும் ஆர்வம் காட்டுவதாக அவர் கூறினார்.

வோஷிங்டனில் உள்ள எமோரி பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டுக்கு எடுத்து வரும் நடவடிக்கை குறித்து பேசிய அவர், இந்தியாவில் மனித வளங்களை திறம்படப் பயன்படுத்துவதில் இந்தியா முன்னோடியாகவுள்ளது. வளர்ச்சி இலக்கை எட்டுவதில் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று கருதுகிறது.

இருநாடுகளிடையிலான மூன்றாவது மாநாடு அடுத்த சில மாதங்களில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். பொருளாதார வளர்ச்சியை எட்டுவதில் எதிர்ப்படும் சவால்கள் குறித்து இருநாடுகளும் விவாதிக்கவுள்ளதாக அவர் கூறினார். இந்த அறிவுசார் மனித வளத்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்விதம் பயன்படுத்திக் கொள்வது என்பது தீர்மானிக்கப்படும். எரிசக்தி, பாதுகாப்பு ஆகிய இரண்டும் இரு நாடுகளுக்கும் மிகவும் தேவையான ஒன்று. இவ்விரு துறைகளில் தான் அதிக சவால்கள் உள்ளன. அதிக பட்ச பொருளாதார வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் அதை எட்டுவதற்கு சர்வதேச தரத்திலான கட்டமைப்பு வசதிகளை இந்தியா உருவாக்கி வருகின்றது.

இருநாடுகளிடையே பரஸ்பர முதலீடுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை தேவையான துறைகளில் அளிக்க முடிவு செய்துள்ளதாக நிருபமா கூறினார். (அ-2)

# பிரிட்டனில் பணமோசடியில் ஈடுபட்ட இந்தியருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(லண்டன்)

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கவுல்ய நந்தன் புருதி லண்டனில் வசித்து வருகிறார். இவர் பிரிட்டன், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஹொங் கொங், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 800 முதலீட்டாளர்களிடம் ஆண்டுக்கு 156 சதவீத வட்டி கிடைக்கும் என்ற ஆசை வார்த்தை கூறி ரூ.920 கோடியை முதலீடாக பெற்றுள்ளார். முன்னாள் கிரிக்கெட் வீரர் டாரன் கவ் மற்றும் நடிகர் பாடகர் ஜெரோம் பிளைன் உள்ளிட்ட பிரபலங்களும் இவரிடம் முதலீடு செய்து ஏமாந்தனர்.

இதையடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் இவருக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. (அ-2)


# அனுமின் நிலையத்திற்கு எதிரான போராட்டத்தில் வெளிநாட்டவர்கள் பங்கேற்க தடைவிதிப்பு

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரான போராட்டத்தில் வெளிநாட்டினர் பங்கேற்க மத்திய அரசு தடைவிதித்துள்ளது. இதனால் நாளை உதயகுமார் நடத்தும் போராட்டத்தில் ஜப்பானைச் சேர்ந்த பெண் கலந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கூடங்குளம் போராட்டத்தில் தொடர்புள்ளவர்களுடனோ அல்லது அவர்களது போராட்டம் மற்றும் நிகழ்ச்சிகளிலோ இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டவர்கள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய குடியுரிமை அலுவலகம் மூலம் மத்திய உள்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன்படி அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டினர் யாரெல்லாம் தமிழகத்திற்கு வருகின்றனர். அவர்களது பயணத் திட்டத்தை முன்கூட்டியே அறிந்த பின்னரே விசா தர வேண்டும் என வெளிநாட்டுப் பிரிவை கண்காணிக்கும் அதிகாரிகளுக்கு உத்தர விடப் பட்டுள்ளது. மேலும் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் சுற்று லா விசா குறித்த விவரங்களை பதிவு செய்து அவர்களது பயணங்களை கண்காணிக்க உள்துறை யினர் இரகசிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

எனவே, வெளிநாட்டினர் பங்கேற்றால் அவர்களை பிடித்து உடனடியாக சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. இதுநடந்தரை போராட்டத்தில் ஏற்கனவே பங்கேற்ற வெளிநாட்டினரின் புகைப்படங்களை ஊடகங்களின் வீடியோக்கள் மூலம் உள்துறையினர் ஆய்வு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)



டில்லியில் உள்ள தன் வீட்டில் தொண்டர்களுடன் ஹோலி பண்டிகையை கொண்டாடிய பா.ஜ.மூத்த தலைவர் அத்வானி.

## பாரதச் செய்தி

# ரிசர்வ் வங்கி வாகனம் கவிழ்ந்தது நடு வீதியில் சிதறிய பத்து இலட்சம் ரூபா நாணயங்கள்

(ஊட்டி)



சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கியில் இருந்து நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஸ்டேட் வங்கியின் பிரதான கிளைகளுக்கு ரூ. 50 இலட்சம் மதிப்பிலான ரூ.1 , ரூ.2, ரூ.5, ரூ.10 நாணயங்களை ஏற்றிக் கொண்டு கண்டெய்னர் லொறி புறப்பட்டது.

வாகனம் மலைப்பாதையில் சென்ற போது கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி கவிழ்ந்தது.

இதில் வானில் இருந்த ரூ .10 இலட்சம் மதிப்பிலான நாணயங்கள் நடு வீதியில் சிதறின. இந்த விபத்தில் வாகன சாரதி காயமடைந்தார். அவர் உடனடியாக அம்புலனஸ் மூலம் அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நாணயம் ஏற்றி வந்த வான் ரோட்டில் கவிழ்ந்ததை அறிந்த அந்த பகுதி பொதுமக்கள் அங்கு திரண்டு வந்தனர். அவர்கள் நாணயங்களை பத்திரமாக மீட்டு வானில் வந்தவர்களிடம் ஒப்படைத்தனர். (அ-2)

# சிரியாவில் இராணுவத்தலையீடு கூடாது; அரசியல் தீர்வே சாலச்சிறந்த முடிபாகும்

## கோபி அனான் தெரிவிப்பு

சிரியாவில் எந்தவொரு வெளி நாட்டு இராணுவ தலையீடும் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று சிரியாவுக்கான ஐக்கிய நாடுகள் மற்றும் அரபு லீக்கின் சிறப்புத் தூதுவரான கோபி அன்னான் எச்சரித்துள்ளார்.


டமாஸ்கஸ்சுக்கான தனது விஜயத்துக்கான திட்டம் குறித்து கோபி அனான் கூறுகையில்,

சிரியாவின் தற்போதைய நிலைமையை அரசியல் ரீதியாக மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும்.

மேலும் சிரிய மக்களின் ஆசைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் தீர்வுகாண சிரியாவின் அரசாங்கத்தையும் எதிர்க் கட்சியையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் தற்போது மட்டும் 8 ஆயிரத்து 500 பேர் பலியாகி இருப்பதாக பிரிட்டனை சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 6 ஆயிரத்து



195 பேர் பொது மக்கள் என்றும் ஆயிரத்து 835 பேர் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் என்றும் 428 பேர் புரட்சிப் படையை சேர்ந்தவர்கள் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (அ-2)

# இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் பெய்த கனமழையால் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் மக்கள் பெரிதும் அவதிக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

சிட்னியில் நேற்று முன்தினம் சில இடங்களில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. 199 மில்லி மீற்றர் என்ற அளவுக்கு பெய்த கன மழையால் நகரின் முக்கிய வீதிகள், தண்டவாளங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் புகையிரதங்கள், வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டன. மேலும் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் சில விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

வெள்ளத்தில் சிக்கித் தவித்த 40 இற்கும் மேற்பட்டோரை மீட்பு படையினர் மீட்டனர். 250 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு படை வீரர்கள் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)




# ஓசாமாவை காட்டிக்கொடுத்த மனைவி

ஓசாமா பின்லேடனின் இருப்பிடத்தை அமெரிக்க உளவாளிகளுக்கு ஓசாமாவின் மனைவிதான் காட்டிக் கொடுத்தார் என்ற புதிய தகவல் தற்பொழுது வெளியாகி உள்ளது.


இது குறித்து பாகிஸ்தானின் ஓய்வு பெற்ற இராணுவ படைத் தலைவர் ஷௌகாத் காதிர் ஒசாமாவின் கடைசி கால வாழ்க்கை குறித்து கூறியிருப்பதாவது,

ஒசாமாவுக்கு 3 மனைவிகள் இருந்தனர். மூன்றாவது மனைவியான அமல் சதா மீது ஒசாமாவுக்கு அதிக பிரியம் இருந்ததால் மூன்று மனைவியருக்கும் இடையே கருத்து வேறுபாடும் மோதலும் இருந்து வந்துள்ளது.

அமெரிக்க உளவாளிகளுக்கு ஒசாமாவை அவனது மூத்த மனைவிதான் காட்டிக் கொடுத்ததாக அவர் பாகிஸ்தானில் நடந்த விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.மேலும் தனது கணவர் ஒசாமா 2002 ஆம் ஆண்டில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என கூறினார். (அ-2)

# ஆப்கானில் வெடிகுண்டுத் தாக்குதல்; ஆறு பிரித்தானிய வீரர்கள் உயிரிழப்பு

## கமரூன் கடும் கண்டனம் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நிகழ்த்திய வெடி குண்டு தாக்குதலில் 6 பிரித்தானிய வீரர்கள் உயிரிழந்தனர். இதற்கு பிரித்தானியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானின் ஹெல்மந்த் மாகாணத்தில் பிரிட்டிஷ் வீரர்கள் இராணுவ வாகனத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தீவிரவாதிகள் இராணுவ வாகனத்தின் மீது நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 6 வீரர்கள் உயிரிழந்தனர்.

மேலும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் கூறுகையில்,

இது எங்களுக்கு மோசமான நாள் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தலைமையிலான நேட்டோபடையினர்கடந்த 10ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தானில் தங்கி தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வருகின்றனர். இந்நிலையில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்குள் அனைத்து வீரர்களும் திரும்ப அழைக்கப்படுவர் என அமெரிக்கா தெரிவித்தது.

2014 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அமெரிக்கப்படை வீரர்கள் ஆப்கானில் தங்கி வீரர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து அமெரிக்க வீரர்கள் இங்கு தங்க முடிவு செய்ததை எதிர்த்தே வெடிகுண்டு தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக கருதப்படுகின்றது. (அ-2)

# உலகில் பணக்கார நபர்களின் பட்டியலில் கார்லோஸ் சிலிம் முதலிடம்



அமெரிக்காவில் இருந்து வெளிவரும் போபர்ஸ் பத்திரிகை ஆண்டு தோறும் உலகளவில் பணக்கார நபர்களின் பட்டியலை வெளியிட்டு வருகின்றது. இந்த ஆண்டுக்கான பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதில் மெக்சிக்கோ நாட்டு டெலிபோன் நிறுவன அதிபர் கார்லோஸ் சிலிம் முதல் பணக்காரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரின் மொத்த சொத்து மதிப்பு ரூபா 3 இலட்சத்து 45 ஆயிரம் கோடி. அவர் 3 ஆண்டுகளாக தொடர்ந்து பணக்கார நபர்களின் பட்டியலில் முதல் இடத்தில் இருந்து வருகின்றார். மைக்ரோசொப்ட் கம்யூட்டர் அதிபர் பில்கேட்ஸ் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார். அவருடைய சொத்து மதிப்பு ரூபா 3 இலட்சத்து 5 ஆயிரம் கோடியாகும்.

முதலீட்டு நிறுவனங்களை நடத்தி வரும் அமெரிக்க தொழிலதிபர் வாரன் பப்பட் ரூபா 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி சொத்துக்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். நான்காவது இடத்தை பிரான்ஸ் தொழிலதிபர் பெர்னாண்டு அர்னால்டு பிடித்துள்ளார். அவருடைய சொத்து மதிப்பு ரூபா 2 இலட்சத்து 5 ஆயிரம் கோடி. 5 ஆவது இடத்தை ஸ்பெயின் தொழிலதிபர் அமென்சியோ ஓர்டேக்கோ பிடித்துள்ளார். அவருக்கு ரூபா ஒரு இலட்சத்து 85 ஆயிரம் கோடி சொத்துக்கள் உள்ளன.

# பாக்.கில் சட்டவிரோதமாக குடியேறியதாக வழக்குப்பதிவு

பாகிஸ்தானில் புலனாய்வு அமைப்பின் காவலில் இருந்த சர்வதேச பயங்கரவாதி பின்லேடனின் 3 மனைவிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். சட்டவிரோதமாக புகுந்து குடியேறியதாக அவர்கள் மீது பாகிஸ்தான் அரசு வழக்கு பதிவு செய்துள்ளது.

பின்லேடனின் மனைவிகள் மீது பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது குறித்து பாகிஸ்தான் உள்துறை மந்திரி ரகுமான் மாலிக் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

பின்லேடனின் 3 மனைவிகள் மீது நடவடிக்கை எடுக்க பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பும் (எ.பி.ஐ.) சட்ட வல்லுநர்களும் முடிவு செய்தனர். அவர்கள் சட்டவிரோதமாக பாகிஸ்தானுக்குள் புகுந்து குடியேறியதாக பாகிஸ்தான் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# பொதுமக்களின் உரிமைக்காக போராடுவேன்

## பதவி விலகிய சிரிய மந்திரி தெரிவிப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதைத்தொடந்து போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 8 ஆயிரத்து 500 பேர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா, அரபு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீவிர முயற்சி கொள்கின்றனர்.

இருந்தும் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை. தொடர்ந்து மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கிடையே ஜனாதிபதி ஆசாத்தின் நடவடிக்கைக்கு அவரது மந்திரிசபையில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. போராடும் மக்களைக் கொன்று குவிப்பதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மந்திரி அப்டா ஹசா மெட்டின் நேற்று முன்தினம் பதவி விலகினார்.

இவர் எண்ணெய் துறையின் துணை மந்திரியாக பதவிவகித்தார். இது தொடர்பான செய்தியை யூடியூப் இணையத்தளத்தில் அவர் தெரிவிக்கையில், ஆசாத் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்.

அவரது ஆட்சிக்கப்பல் மூழ்கி வருகின்றது. எனவே நான் போராட்டக்காரர்கள் பக்கம் சென்றுவிட்டேன். பொது மக்களின் உரிமைக்காக போராடுவேன் என்று குறிப்பிட்டார். (அ-2)



கோலாலம்பூரில் உள்ள ஹூலு லாங்கட் பகுதியில் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் குடியிருப்புப் பகுதிகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறிநிற்கப் போது மான அறிவில்லாத மூடர் செயலாகும்.
– ஃபிராங்க்ளின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தண்டம் அறவிடுவதற்காகவா? ஒருவழிப் பாதை

சட்டம், ஒழுங்கு என்பவற்றைப் பாதுகாப்பதில் பொலிஸாருக்கு இருக்கக்கூடிய பொறுப்பும் கடமைப்பாடும் மிகவும் காத்திரமானவை.

பொலிஸார் பக்கம் சார்கின்றபோது சட்டமும் ஒழுங்கும் குலைந்து–சிதைந்து விடுகின்றன.

எனவே நேர்மை, நீதி, நியாயம், நடுவு நிலைமை என்பனவற்றை பொலிஸார் மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

பொலிஸ் பதவி ஒருவருக்குக் கிடைக்குமாக இருந்தால், மிக உயர்ந்த பதவி கிடைத்து விட்டதாக ஊரும் உறவும் பேச வேண்டும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக பொலிஸ் பணியை விரும்பாத சமூகமே காணப்படுகின்றது.

இதற்குக் காரணம், சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய பொலிஸாரே அதனை மீறிச் செயற்படுவது, இலஞ்சம் வேண்டுவது இவற்றினால், 'பொலிஸ்' என்ற உயர்ந்த பதவி இழிவுபடுத்தப்படலாயிற்று.

பொலிஸ் சேவை உயரியதாக இருக்க வேண்டுமாக இருந்தால், பொலிஸாரின் நடத்தையில் மாற்றம் வேண்டும்.

கடந்த 5 தினங்களுக்கு முன்னர் கன்னாதிட்டிச் சந்தியில் இருந்து வண்ணார்பண்ணை சிவன் கோயில் சந்தி வரையான கன்னாதிட்டி வீதி ஒருவழிப் பாதை என்று கூறி வண்ணை சிவன் கோயில் சந்தியில் இருந்து கன்னாதிட்டிச் சந்திக்கு வாகனத்தில் வந்தவர்களை பொலிஸார் மறித்து தண்டம் விதித்தனர்.

இவ்வாறு பொலிஸார் தண்டம் விதித்தபோது ஒரு வழிப்பாதையென்ற அறிவித்தல் எதுவும் இல்லாமல் எப்படி தண்டம் விதிக்க முடியும் என்று பயணி ஒருவர் கேட்டார். பொலிஸார் எதுவும் பதில் அளிக்கவில்லை.

எவ்வளவு வேகமாக தண்டப் பத்திரம் எழுத முடியுமோ அந்தப் பணியை பொலிஸார் சிறப்பாகச் செய்து முடித்தனர்.

நாம் என்ன செய்ய முடியும்?

இரும்புக் கடத்தலைத் தடுத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரனுக்கு அதிரடி இடமாற்றம் வழங்கப்பட்ட நிலையில், சாதாரண தமிழ்ப் பயணிகள் எதுவுமே செய்ய முடியாது என்பதில் நூறு வீத உண்மை உண்டு.

எதுவாயினும் பொதுமக்கள் தன்னைச் சந்தித்து தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தன்னிடம் தெரிவிக்க முடியும் என்று யாழ்ப்பாணத்துக்கான புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் கூறியிருப்பதானது, ஆறுதலைத் தந்தாலும்,

போக்குவரத்து ஒழுங்குமீறல் தண்டமாக யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில் மட்டும் நாளாந்தம் நாற்பதாயிரம் ரூபாய் செலுத்தப்படுகின்றது.

காலை முதல் மாலைவரை கல்லும் மண்ணும் கலந்த சீமெந்தைத் தூக்கியதால் ஆயிரம் ரூபாய் ஊதியத்தை உழைத்த ஒருவர், ஒரு வழிப் பாதைக்கான தண்டமாக அதைக் கட்டும்போது எப்படி சீவியம் நடத்தமுடியும்?

அழிவு காலம் நெருங்கும் வேளையில் அதர்மம் தலைவிரித்தாடும் என்பார்களே! அதுதான் இப்போது நடக்கிறதோ! என்னவோ!

# தமிழ் இளைஞன் மீது தாக்குதல் டாக்டர் ஜயலத் எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

யாழ். குறிகாட்டுவானில் தமிழ் இளைஞன் மீது பௌத்த பிக்கு மேற்கொண்ட தாக்குதலை பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன வன்மையாக கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட கண்டன அறிக்கை வருமாறு,

குறிகாட்டுவான் – நெடுந்தீவுக்கு இடையிலான படகுச் சேவை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இந்த சேவையில் சாதாரண மக்களே அதிகமாக நன்மையடைகின்றனர். யாழ். குடாநாட்டிலிருந்து ஏனைய தீவுகளுக்குச் செல்லவும் இந்தப் படகுச் சேவை பெரிதும் பயனளிக்கின்றது.


யுத்தத்தை எதிர்கொண்டு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த காலத்தில் விசேடமாக வட பகுதி மக்களுக்கு பயன் மிக்கதொரு சேவையை இந்தப் படகுச் சேவை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் கடந்த 6ஆம் திகதியன்று மாலை தமிழ் இளைஞன் மீது பௌத்த பிக்கு மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான தகவல்களை ஊடகங்கள் வாயிலாக நான் அறிந்து கொண்டேன்.

இந்தத் தாக்குதலை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறான தாக்குதலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

எந்த தனிப்பட்ட கோபம் இருப்பினும் அதற்காக சட்டத்தை கையில் எடுப்பது பிழை. இந்த அதிர்ச்சியான சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட நபரை சட்டத்துக்கு முன்னால் நிறுத்துவது பொலிஸாரது கடமையாகும்



இவ்வாறான சம்பவங்களால் நெருக்கடிகளை எதிர்கொள்வது அகிம்சை தமிழ் மக்களே என்றுள்ளது. (எ-1)

# மாணவியை காணவில்லை பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பெற்றோர் முறையிட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழில் அமைந்துள்ள மகளிர் கல்லூரியொன்றில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவியான சுதன் திஸ்ஷா (வயது 14) என்ற மாணவியே காணாமல் போயுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த மாணவி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பாடசாலைக்குச் சென்றார் எனவும் நேற்று வரை அவர் வீட்டுக்கு திரும்பவில்லை எனவும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் தேடியும் இவர் கிடைக்கவில்லை எனவும் இவரைக் கண்டுபிடித்து தருமாறு பெற்றோர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாடசாலை மாணவி காணாமல் போனமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் முறைப்பாடு எதுவும் பதியப்படவில்லை. (எ-8,11)

# ஒன்றியம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சிகையலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் அமைக்கப்படவுள்ளதாக ஒருங்கிணைப்பாளர் சி.குணரத் தினம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் உள்ளடங்கலாக உள்ள சிகையலங்கரிப்பாளர் சங்கங்களை ஒன்றிணைத்து ஒன்றியமாக்க இருப்பதால் அனைத்துச் கிளைச் சங்கங்களும் நடப்பு ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவை மேற்கொண்டு உதவுமாறும் ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை தினமாக அறிவிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஏ)

# அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை இடைநிறுத்தல்

(யாழ்ப்பாணம்)

• யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சைகள் யாவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறாது எனவும் இதற்குப் பதிலாக இப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் புதன்கிழமை குறித்த நேர அட்டவணைக்கமைய நடைபெறும் எனவும் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் பரந்தாமன் அறிவித்துள்ளார். (ஏ)

# மீட்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியினை தொடரும் மாணவர்களுக்கான முதலாவது மீட்டல் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(எ-7)

# மதுபோதையில் சத்தம் போட்டவர் உலக்கை அடிக்கு இலக்கானார்!

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் சத்தம் போட்ட குடும்பஸ்தர் ஒருவர் அயல் வீட்டுக்காரரினால் உலக்கை அடி வாங்கியுள்ளார். இச் சம்பவம் நேற்றுக்காலை பிரான்பற்றிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தினைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையார் ஒருவரே உலக்கை அடி வாங்கியவராவார்.

மது போதையில் இரவு முழுவதும் அயல் வீட்டுக்காரருக்கு தொந்தரவு அளிக்கும் முகமாக சத்தமிட்டு கத்தி வந்துள்ளார்.

இதனை பொறுக்க முடியாத அயல் வீட்டுக்காரர் குறித்த குடும்பஸ்தரின் தலையில் உலக்கையால் தாக்கியுள்ளார்.

தலையில் காயமடைந்து மயங்கிய நிலையில் இருந்த குடும்பஸ்தர் சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கொடுப்பவனாக இருங்கள்



மனித வடிவம் கொண்ட அனைத்து உயிரையும் வழிபடுங்கள்.

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் இறைவனது படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்வது அதைவிட மிக நல்லதாகும்.

ஒவ்வொரு உயிரிலும் தெய்வீகத்தன்மை குடிகொண்டிருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளத்தில் குடிகொண்டுள்ள தெய்வீகத் தன்மைய மலரச் செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

தெளிந்த உண்மையையும் கருத்துத்தூய்மையையும் படைக்கலனாகக் கொள்பவர்கள் எந்தத் தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவது உறுதி.

இறைவன் வரம்பு கடந்த பெருமைகளை உடையவன். தூய்மையான மனத்தைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். எப்போதும் இறைவனையே சார்ந்து நிற்பதுடன் நன்நெறியில் நின்றால் எவராலும் வெல்லமுடியாது.

எப்போதும் இனிமையோடும் மகிழ்ச்சியோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

# தேசிய மாணவர் படையணியின் செயற்பாடுகள் வடக்கிற்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

தேசிய மாணவர் படையணியின் செயற்பாடுகளை வடமாகாணத்தில் விஸ்தரிக்க விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விஸ்தரிப்பு வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 25 பாடசாலைகளைச் சேர்ந்த 650 தமிழ் மாணவர்கள் விசேட முப்படை பயிற்சிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர தெரிவித்தார்.

தற்பொழுது வடமாகாணத்தின் யாழ். மாவட்ட பாடசாலைகளைச்சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ளதாகவும் அடுத்தகட்ட நடவடிக்கையாக முல்லைத்தீவு,வவுனியா, கிளிநொச்சி, ,மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தேசிய மாணவர் படையணியின் 22ஆவது படையணி முல்லைத்தீவு மாவட்டத்தில் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

பாடசாலை செல்லும் மாணவர்களை தாய்நாட்டுக்குச்சேவை செய்யும் நாளைய தலைவர்களாக மாற்றுவதனை கருத்திற்கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலில் வடமாகாண மாணவர்களுக்கும் இந்தப் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கை விஸ்தரிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள 3 ஆயிரம் பாடசாலைகளைச் சேர்ந்த 62 ஆயிரம் மாணவர்கள் தேசிய மாணவர் படையணியில் அங்கம் வகிக்கின்றனர்.

தெரிவுசெய்யப்பட்ட 650 மாணவர்களுக்காக ரன் தெம்பே தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

மேலும் குருநாகலிலுள்ள 4 ஆவது படையணியிலுள்ள குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகளின் 650 மாணவர்களும் வடபகுதி மாணவர்களுடன் இணைந்து பயிற்சிகள் பெற்றுக்கொள்ளவுள்ளனர். இதன்மூலம் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மாணவர்களுக்கு இடையில் உறவுகளை பலப்படுத்தவும் கலை, கலாசார, பாரம்பரிய விடயங்களை பரிமாற்றிக்கொள்ளவும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் எனவும் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களுடன் விசேட நற்சான்றுப் பத்திரங்களும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விசேட ஞாபகச் சின்னங்களும் வழங்கப்படவுள்ளன.

இதுதவிர விமானப்படை, கடற்படை, பொலிஸ் ஆகிய துறைசார்ந்த பயிற்சியும் இந்த மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வழங்கத்திட்டமிட்டுள்ளதாகவும் இதற்காக தலா 150 மாணவர்கள் என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பயிற்சிகள்

தேசிய மாணவர் படையணியைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் வருடமொன்றுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காகவும் இருதரப்பு அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்காகவும் அனுப்பப்படுகின்றனர்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது வடபகுதி பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்களுக்கும் வெளிநாடுகளுக்குச் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

மேற்படி பயிற்சிகளைப் பெறும் மாணவர்கள் எதிர்காலத்தில் முப்படை மற்றும் பொலிஸில் இணைந்து கொள்ள விரும்பும் பட்சத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்த அவர் இதில் எந்த விதமான கட்டாயப்படுத்தல்களும் இருக்காது என்றும் குறிப்பிட்டார். (அ-7)

## பணமோசடியில் ஈடுபட்ட பொலிஸாருக்கு பிணை

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பலரை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் நுகேகொடை நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பலரிடம் 190 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். இவருடன் மகரகமவைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலா ரூபா 25 ஆயிரம் ரொக்கப்பிணையிலும் ஐந்து இலட்சம் ரூபா சரீர பிணையிலுமே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவரும் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் கழக விளையாட்டு மைதானத்தல் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

வடமராட்சிக்குஉட்பட்ட விளையாட்டுகழகங்கள் அனைத்தும் அன்றையதினம் போட்டியில் கலந்து கொள்ளலாம் என கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (அ-3-24)

## வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டிகள்

யாழ். பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக, வவுனியா வளாக, வணிகக்கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி ரி. மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய ஆசிரியர் என்.கருணாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

## மின்ஒழுக்கு ஏற்பட்டதால் முச்சக்கரவண்டி நாசம்

(கரவெட்டி)

முச்சக்கரவண்டியில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் தீப்பற்றியதில் முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு கப்பூது வெளிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வதிரிப் பகுதியில் இருந்து மீசாலை நோக்கி குடும்பத்தினருடன் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு முற்றாக எரிந்துள்ளது.

இதில் பயணித்த குடும்பஸ்தர் எதுவித ஆபத்தும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-3-24)

## சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அநாதரட்சகன் எழுதிய நிமிர்வு சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எழுத்தாளர் தெணியான் தலைமையில் யா/ ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தாயக ஆசிரியர் க. தணிகாசலம் வெளியீட்டுரையை ஆற்ற உதயம் பூட்வெயர்ஸ் உரிமையாளர் மா. புவனேந்திரன் முதற்பிரதியை பெற்றுக் கொள்வார். (அ)


Bank of Ceylon BOC

**மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை**

**யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 16.06. 2011 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 16.12.2010 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.**

| கிளையின் பெயர் | ஏலவிற்பனைத்திகதி, இடம், நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை (யாழ். கச்சேரி, யாழ். பஸ் நிலையம், யாழ். பிரதான வீதி விரிவாக்கற் கிளைகள் உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம். 2012 மார்ச் 17 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2 ஆம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| திருநெல்வேலி | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை (வல்வெட்டித்துறை விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம் விரிவாக்கற் கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |

**இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.**

தொலைபேசி இல- 021 222 3126
021 222 3945

செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
வடபிராந்திய காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6046)



**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**பயிலுநர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல், கிளைமுகாமையாளர் ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள்**

- 18 வயதுக்கு மேற்பட்டவராகவும்45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- பயிற்சிக் காலம் முடிந்தவுடன் நிரந்தர ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- பயிற்சிக் காலம் முடிவடைந்த பின்னர் கிளையினைப் பொறுப்பேற்கும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்க ஆதனப் பிணை செலுத்தல் வேண்டும்.
- நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது ஒழுக்கம், திறமை, தொழில் அனுபவம் என்பன தொடர்பாக கவனத்தில் எடுக்கப்படும்.
- பயிற்சிக் காலத்தில் நாளாந்த அடிப்படையில் படி வழங்கப்படும்.
- கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் உட்பட இரு அமர்வுகளிற்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தி னால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி 25.03.2012 ஆம் திகதிக்கு முன்னதாக "பொது முகாமையாளர் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி "என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப் பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் அனுப்பப்படும்.


சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து)
சாவகச்சேரி. (சி-6045) பொது முகாமையாளர்

# வடக்கின் மாபெரும் போர்

## 2-வது இன்னிங்ஸில் தடுமாறும் மத்திய கல்லூரி

# பலமான நிலையில் சென்.ஜோன்ஸ் அணி





அரைச்சதம் கடந்த சஞ்ஜயன்.

வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 237 ஓட்டங்களையும், யாழ்.மத்திய கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 76 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் இழந்துள்ளது.


வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்சில் 144 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின் தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிபில் 70 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

நேற்றைய தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஆரம்பத்திலேயே தடுமாற்றத்தைச் சந்தித்தது.

## Battle of the north



தொடர்ந்து 4 விக்கெட்டுக்கள் சொற்ப ஓட்டங்களிலேயே வீழ்த்தப்பட்டன.

ஒரு கட்டத்தில் 108 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய சென். ஜோன்ஸ் அணியை சஞ்சஜனும், பிருந்தாபனும் அணியை மீட்டு எடுத்தனர்.

7 ஆவது விக்கெட்டுக்காக இருவரும் 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

சஞ்சஜன் அபாரமாக விளையாடி 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பிருந்தாபன் 31 ஓட்டங்களை எடுக்க சென். ஜோன் ஸ் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்சில் 237 என்ற வலுவான ஓட்ட இலக்கை அடைந்து.

அதிக பட்சமாக சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக சஞ்ஜயன் 68 ஓட்டங்களையும், பிருந்தாபன் 31 ஓட்டங்களையும், துவாரகசீலன் 30, ரஜிந்தன் 27, ஆபிரகாம் அனோஜன் 23 ஓட்டங்களை அதிகபட்சமாக அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மத்திய கல்லூரி சார்பாக வதுசனன் 28 ஓவர்கள் பந்துவீசி 53 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கோகுலன் 34.1 ஓவர்கள் பந்துவீசி 88 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சௌமிதரன் 7 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை விட 93 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரிக்கு கபிலன், சிறிவண்ணன் ஆகியோர் முறையே 6, 12 ஓட்டங்களுடன் விரைவாக ஆட்டமிழந்தனர். எனினும் நிறோஜ் மட்டும் நிலைமையை உணர்ந்து பொறுப்பாக விளையாடி 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் யாழ். மத்திய கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் சௌமிதரன் 6 ஓட்டங்களுடனும், டிராவின் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக பிருந்தாபன், சஞ்சஜன், அமிர்தயன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளனர்.

போட்டியின் மூன்றாவதும் இறுதியுமான நாள் இன்றாகும்.





# இறுதிப் போர் வீடியோவைப் பார்...

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற உச்சக்கட்டப் போரின்போது மனித உரிமைகளை மீறும் வகையில் இலங்கை இராணுவம் போர்க்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்து இலங்கை அரசின் மீது உரிய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து பல்வேறு நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

தி.மு.கவைப் பொறுத்தவரையில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து 27.04.2011 அன்று எனது தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயற்திட்டக் குழுவின் கூட்டத்திலேயே முதல் தீர்மானமாக, இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாயிலாக அமைக்கப்பட்ட இந்தோனேசிய அரசின் தலைமை வழக்கறிஞர் தலைமையிலான விசாரணைக் குழு, இலங்கைப் பண்டயினர் இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தியதாகக் கூறப்படும் கண்மூடித்தனமான தாக்குதலை உறுதி செய்திருக்கிறது.

இந்தப் பிரச்சினை குறித்து தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே ஒருமித்த நிலைப்பாட்டினையே மேற்கொண்டு தெரிவித்திருக்கின்றன. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய ஐ.நா. தீர்மானம் தொடர்பாக தமிழக மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் முடிபு செய்யப்படும் என்று மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுமுன்தினம் சென்னையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் இறுதிப் போரின் போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளின் தொகுப்பு ஒன்றை நான் பார்க்க நேரிட்டபோது என் கண்களில் வழிந்த கண்ணீர் இன்றும்நின்றபாடில்லை. மத்திய அரசில் இருப்போர் அந்தக் காட்சிகளை ஒருமுறை பார்த்தாலே தமிழக மக்கள் சார்பில் வைக்கப்படுகின்ற இந்தக் கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

அமெரிக்க நாட்டின் சார்பில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்மானத்தில் முக்கியமாக சட்டத்துக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் படுகொலைகள் மற்றும் ஏராளமானோர் காணாமல் போனதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச சட்ட விதிகள் தீவிரமாக மீறப்பட்டது குறித்து இலங்கை அரசு அமைத்த குழு போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அந்தக் குழு எடுத்துரைத்துள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஆலோசனைகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வழங்க வேண்டும். அதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

எனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத்தீர்மானத்தை இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட கொடுமையானதும் கடுமையானதுமான போர்க் குற்றங்கள் அனைத்தையும் இந்திய அரசு நினைவிலே கொண்டு இனியும் காலம் தாழ்த்தாது. இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொடுத்துள்ள தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக அறிவித்திட வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார். (எ-11)

# துப்பாக்...

சாவகச்சேரியில் இராணுவத்தினருக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. தனிப்பட்ட விரோதம் காரணமாக ஒருவரை ஒருவர் சுட்டதனால் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என பலாலி இராணுவப் படைத் தலைமையக ஊடகப் பேச்சாளர் மேஜர் மல்லவராச்சி தெரிவித்தார்.

சாகச்சேரி நுணாவில் முருகன் கோயிலுக்கு அண்மையிலுள்ள இராணுவக் காவலரணில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், கோப்ரல் சத்னாயக்க மற்றும் கபுகோட்டுவ, பெர்னாண்டோ ஆகிய மூவருமே உயிரிழந்தவர்களாவார்.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் உயிரிழந்த மேற்படி மூன்று இராணுவ வீரர்களின் சடலங்களும் பலாலி இராணுவப் படைத் தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

இதில் இருவர் இராணுவ உயர் அதிகாரிகள், எனவும் ஒருவர் சிப்பாய் எனவும் மல்லவராச்சி மேலும் தெரிவித்தார். இச்சம்பவத்தினால் நுணாவில் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (எ-6)

# 10 இலட்சம்...

10 இலட்சம் ரூபாயை ஆலயம் ஒன்றில் வைத்து பெற்றபோது அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள நலன்புரி நிலையக்கட்டிடம் ஒன்றை பலவந்தமாக தக்கவைத்துள்ளவர்களை அங்கிருந்து அகற்றுவதற்காகவே இலஞ்சம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)


## Physics Class

பௌதிக விஞ்ஞான பட்டதாரியினால் க.பொ.த. உயர் தரத்திற்கு தனியாகவும், குழுவாகவும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
(யாழ்.நகர் மற்றும் வலிகாமம் பகுதிக்குள்)
தொடர்பு: 0758353541
(சி-6063)

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
## கண்டனன் சீதையை
இசை நாடகம்
அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்திலிருந்து தொகுக்கப்பட்டது
காலம் : 11.03.2012, மாலை 3.00 மணி
இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்.
நெறியாள்கை : குழந்தை ம.சண்முகலிங்கம்
தங்கள் வரவு எங்களை மகிழ்விக்கும்

Nation Popular Travels & Tours
www.nationtravels.com 0214 920 920



அம்மா பகவான் சரணம்
ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ
## ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவானின் 63ஆவது ஜனனதின பெருவிழா
## நகர சங்கீர்த்தனமும் ஸ்ரீ அம்மா பகவானின் விசேட Webcast தரிசனமும்

இடம் :- நகேந்திரம் சுபதர்சன் (வவி) சத்சங்கம் கே.கே.எஸ். வீதி, சுன்னாகம், (பழைய பொலிஸ் ஸ்ரேசன் முன்பாக)
காலம் :- 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை
அன்பர்களே!
அவதார புருஷர்களாகிய ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் மனித குலத்திற்கு சம்பூர்ண ஜீவனமுக்தியை அளிக்கும் நோக்கத்துடன் இப் பூமியில் அனுக்கிரகம் அளிக்க அவதாரம் செய்துள்ளனர்.

ஸ்ரீகல்கி பகவானின் 63ஆவது ஜனன தினத்தையொட்டி காலை 7 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோவிலிலிருந்து நகர சங்கீர்த்தனத்துடன் மேற்படி சத்சங்கத்தை அடைந்து முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ அம்மா பகவானின் Webcast தரிசனமும் அதனைத் தொடர்ந்து பாதுகாபிஷேகமும் ஜனனதின வைபவமும் நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் தவறாது கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தை பெற்று ஆனந்தப் பெருவாழ்வு அடைய அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு :- பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும்.
தொடர்புகளுக்கு :- 0777198434, 0212240475, 0213217476, 0212240476
நகேந்திரம் சுபதர்சன் சத்சங்கம்,
சுன்னாகம்.
(7657)

## கண்ணீர் அஞ்சலி
### சூசைப்பிள்ளை அகஸ்ரின்
(அதிபர், கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை)

கல்விச் சேவையில் என்னுடன் கைகோர்த்தவர்
பண்புகளால் எம்மை ஈர்த்தவர்
நெருக்கடிகள் சூழ்ந்தபோதும் குலையாது கல்விப் பயிர் காத்தவர்
தமிழ்த் தேசியத்தின் மீது ஆறாத பற்றுடைய பண்பாளன்
- நண்பன் அமரர் அகஸ்ரின்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு துயருறும் குடும்பத்தவர்களுக்கு எனது ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.
சிவஞானம் சிறிதரன்
நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(சி-6084)

union assurance
Trust in your tomorrow, today
## UNION ASSURANCE PLC
## பதவி வெற்றிடம்

இலங்கையில் 151 வருடத்திற்கு மேலாக மக்களுக்கு சேவையாற்றி வரும் ஜோன்கீல்ஸ் கோல்டிங் கம்பனியின் உப நிறுவனமான Union Assurance PLC பருத்தித்துறை கிளையில் பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளவுள்ளது.

பதவி வெற்றிடம் 01
- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (ADO)
- காப்புறுதி அபிவிருத்தி முகாமையாளர் (ADM)

பதவி வெற்றிடம் 02
- தனி நிதி காப்புறுதி ஆலோசகர் (PFA)
- காப்புறுதி நிதி ஆலோசகர் (FA)

கல்வித்தகைமைகள்
- G.C.E. (O/L) இல் கணிதபாடம் உட்பட 6 பாடத்தில் சித்தி (பதவி வெற்றிடம் 02)
- G.C.E. (A/L) இல் 3 பாடம் சித்தி (பதவி வெற்றிடம் 01)
காப்புறுதி துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம்-மேலதிக தகைமை (பதவி வெற்றிடம் 1)

குறிப்பு :-
- 2 மாத பயிற்சி காலத்தை உடையது
- பயிற்சிக்காலத்தில் நீங்கள் இலங்கை காப்புறுதி நிறுவனம் நடாத்தும் பரீட்சையில் சித்தியடைந்தால் பயிற்சிக்கால முடிவில் வேலையில் நிரந்தரமாக்கப்படுவதுடன் SLII தொழில் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் : யூனியன் அஸ்யூரன்ஸ் இல. 357/1, பிரதான வீதி, பருத்தித்துறை
(வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில்)
காலம் : 12.03.2012 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 9.30 - பிற்பகல் 2.30 மணிவரை
H.P. : 0773422722
முகாமையாளர்
யூனியன் அஸ்யூரன்ஸ்,
பருத்தித்துறை.
(7654)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.